
# இறையியல் கோலங்கள்

வடிவம் 19 ஜூன் 2006 வண்ணம் 2



"உன்
வித்துக்கும்
அவள்
வித்துக்கும்
இடையே
பகையை
உண்டாக்குவோம்"

தொ.நூ: 3:15

## மரியியல் 1

# இறையியல் கோலங்கள்

## தமிழ் இறையியல் காலாண்டு இதழ்

# IRAI IYAL KOLANKAL

## Tamil Theological Quarterly

VOL : 19
NO : 02
JUNE : 2006

வடிவம் : 19
வண்ணம் : 02
யூன் : 2006.

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்,
இலங்கை.

**ஆசிரியர் :-**

அருட்தந்தை ச.வி.ப.மங்களராஜா

**துணை ஆசிரியர் :**

அருட்தந்தை சா.பி.கிருபானந்தன்
அருட்தந்தை ப.ஜோ.ஜெபரட்ணம்
அருட்தந்தை பி.கிறிஸ்துநாயகம்

**நிர்வாகக் குழு :**

அருட்சகோ. யே.ஜெஸ்லி ஜெகானந்தன்
அருட்சகோ. எ.எட்வினாதன்
அருட்சகோ. சூ.மில்ரன் தேவராஜ்
அருட்சகோ. கிறிஸ்ரி றூபன் பெனாண்டோ
அருட்சகோ. அ.ஜெ.அ.ஜெயரஞ்சன்
அருட்சகோ. ஆ.மைக் மயூரன்



**வெளியீடு :**

புனித சவேரியார் குருத்துக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம், இலங்கை.



**Editor :**

Fr. S. V. B. Mangalarajah

**Sub Editors :**

Fr. S. F. Kirupananthan
Fr. P. J. Jebaratnam
Fr. P. Chirstunayagam

**Administrative Board :**

Bro. J. Jesly Jehananthan
Bro. E. Edwinathan
Bro. S. Milton Devaraj
Bro. A. Christy Ruban Fernando
Bro. A. J. A. Jeyaranjan
Bro. A. Mac Mayooran



**Publication :**

St. Francis Xavier's Seminary
Columbuthurai, Jaffna, Sri Lanka.
Tel No : 021 222 2482, 021 222 7145

# பொருளடக்கம்

## "அன்னை மரியா"


1. ஆசிரியரிடமிருந்து.............

2. திருவிவிலியத்தில் மரியா
   அருட்சகோதரன் சூ.நியூட்டன்

3. மரியா இறைவனின் அன்னை
   அருட்சகோதரன் அ.ரஜனிகாந்

4. அன்னை மரியா என்றும் கன்னி
   அருட்சகோதரன் பெ.இயூஸ்ரஸ்

5. மரியாவின் அருள்மிகு அமல உற்பவம்
   அருட்சகோதரன் தே.ஆ.மெனோ பஸ்ரி ஜயந்த (அ.ம.தி)

6. மரியாவின் விண்ணேற்பு
   அருட்சகோதரன் றொ.றொபின்சன் (அ.ம.தி)

7. இவ்விதழின் இறையியலாளர் ~ புனித நசியான்சுஸ் கிறகோரியார்.
   அருட்சகோதரன் ஜெகன்குமார் கூஞ்ஞு (அ.ம.தி)

8. குறுக்கெழுத்துப் போட்டி.



# ஆசிரியரிடமிருந்து....

கத்தோலிக்க திருச்சபையின் தனித்துவத்திற்கும் சிறப்பிற்குமான காரணங்களில் ஒன்று அது தனது விசுவாச சத்தியங்களில் மரியாவிற்கு கொடுத்திருக்கின்ற சிறப்பான இடம் என்று கூறமுடியும்.

மரியாவை இறைவனின் அன்னை என்றும் அவர் அமலோற்பவியாக உற்பவித்து என்றும் கன்னியாக இருக்கின்றார் என்றும், இவற்றின் காரணமாக அவருடைய உடலும், ஆன்மாவும் அழிவுக்குட்படாமல் விண்ணேற்படையும் பாக்கியம் பெற்றது என்றும் திருச்சபை ஆழமாக விசுவசிக்கின்றது. மரியாபற்றி திருச்சபை கொண்டிருக்கிற இவ்விசுவாசக் கோட்பாடுகள் இறை வெளிப்பாடாக திருச்சபைக்கு வழங்கப்பட்ட போதிலும், திருச்சபையின் இவ்விசுவாசம் உண்மையானது என்பதை மரியா தாமே தனது அற்புதக்காட்சிகள் வழியாக அவ்வப்போது உறுதிப்படுத்தியும் வருகின்றார்.

மரியா மீட்பராகிய இயேசுக்கிறிஸ்துவின் தாயாக
இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்டதை
கபிரியேல் வானதூதர் மங்களவார்த்
தையாக அறிவித்த கணத்திலே

மரியாவின் வரலாறு புதிய ஏற்பாட்டில் ஆரம்பமாகிய போதிலும் அவரைப்பற்றிய முன்கூறல்கள் பழைய ஏற்பாட்டின் பல இடங்களில் மறைந்து கிடப்பதை மரியியலாளர்கள் வெளிக்கொணர்ந்திருக்கிறார்கள்.

மீட்பராகிய இயேசுவை உலகிலே மனிதராக பெற்றுக் கொடுத்ததுமல்லாமல் கல்வாரிவரை அவரோடு கூட நடந்து வந்து, இப்போது விண்ணக அரசியாக வீற்றிருந்து மக்களை அரவணைக்கும் அன்னையாக, தன் திருமகனின் மீட்புச் செயலில் தானும் பங்காளியாக இருந்து செயற்படுகின்ற மரியா இறைவன் எமக்குக் கொடுத்த இணையற்ற கொடையாகும்.

மேற்படி விடயங்களில் சிலவற்றை விளக்கும் கட்டுரைகளைத்தாங்கி மரியியல் இதழாக இவ்விதழ் மலர்கிறது. மரியியல் பற்றிய மேலும் சில ஆக்கங்களை எமது அடுத்த இதழ் தாங்கி வரவிருக்கின்றது.

மரியாவின் பக்தர்களாக மட்டுமல்லாமல் இயேசுவின் சீடத்துவத்திற்கு இலக்கணமான அவருடைய வாழ்வையும் பின்தொடர்வோமாக!

அருட்திரு.ப.யோ.ஜெபரட்ணம்



# திருவிவிலியத்தில் மரியா

அருட்சகோதரன் சூ.நியூட்டன்

## (1). பழைய ஏற்பாட்டில் மரியா

"கடவுள் அன்பாய் இருக்கிறார்" (1யோவா 4:8) "உங்கள் கடவுளும் ஆண்டவருமாகிய நான் தூயவர்!" (லேவி 19:2). தூயவரும், அன்பாயிருப்பவருமாகிய கடவுள் தமது உருவிலும், சாயலிலும் மனிதனைப் படைத்தார் (தொ.நூ 1:26). ஆதாமையும் அவனிடமிருந்து ஏவாளையும் உருவாக்கினார். (தொ.நூ 2:22). அவர்கள் இறை யாசீர் பெற்றிருந்தனர். ஆனால் அவர்கள் கடவுளை விட படைப்பை நேசித்தனர், படைத்தவரிடமிருந்து விலகி பாவம் செய்தனர். ஆனால் கடவுள் அவர்களிடமிருந்து விலகவில்லை. அவர்களைத் தேடிச் சென்றார். அவர்களை பாவத்திலிருந்து மீட்க மீட்பரை வாக்குறுதியாகத்தந்தார்.

> ஆனால் கடவுள் அவர்களிட மிருந்து விலகவில்லை. அவர்களைத் தேடிச் சென்றார். அவர்களை பாவத்திலிருந்து மீட்க மீட்பை வாக்குறுதியாகத்தந்தார். இந்த மீட்பின் வரலாற்றிலே தான் "பெண் என்ற வார்த்தை மிகவும் பிரபல்யமானது."

இந்த மீப்பின் வரலாற்றிலேதான் "பெண்" என்ற வார்த்தை மிகவும் பிரபல்யமானது. ஆண்டவர் பாம்பிடம், "உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன், அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும். நீ அதன் குதிக்காலைக் காயப்படுத்துவாய்" என்றார்.

## 1.1. தொ.நூ 3:15 ன்படி....

திருவிவிலியத்தின் முதல் புத்தகத்தில் குறிப்பிடப்படுகின்ற இப் பெண்ணானவள் யார்? ஏவாளைத் தவிர வேறோரு பெண்ணைக் குறித் தும் ஆண்டவர் குறிப்பிடுகின்றார். அப்பெண் யார்? அப்பெண் எங்கிருக் கிறார்? அப்பெண்ணைக் குறித்து நாம் யோவா 2:4ல் வாசிக்கிறோம். இயேசு அவரிடம் "அம்மா, அதைப்பற்றி நாம் என்ன செய்யமுடியும்? எனது நேரம் இன்னும் வரவில்லையே". யோவா 19:26. இயேசு தம் தாயையும் அருகில் நின்ற தம் அன்புச் சீடரையும் கண்டு தம் தாயிடம் "அம்மா, இவரே உம் அன்பு மகன்" என்றார். தி.வெ: 12:1ல் குறிப் பிடப்படுவதும் இப்பெண்ணைத்தான் என வாசிக்கின்றோம் ஆகவே மீட்பு இப்பெண் வாயிலாக வரும் என்று கடவுள் தொடக்க நூலிலேயே வெளிப் படுத்தினார். ஆகவே எவ்வாறு பாவம் ஒரு பெண்ணால் வந்தது போல மீட்பிற்கும் ஒரு பெண் வழியாகத்தானே செல்ல வேண்டும். எனவே தொ.நூ 3:15ல குறிப்பிட்டுள்ள பெண் எங்கேயிருந்தார்? இல்லாத ஒன்றைக்குறித்து எப்படி கூற இயலும்? கடவுள் இல்லை என்று கூறுபவர்கள், கடவுள் உள்ளார் என்று தான் பறைசாற்றுகிறார்கள் என்கிறார் புனித அகுஸ்தினார். ஆகவே கடவுள் தொ.நூ 3:15 இல் ஒரு பெண்ணைக் குறித்து கூறும்போது, ஒன்றில் அப்பெண் அப்போதே இருந்திருக்க வேண்டும், இல்லையென்றால் அவ்வாறான ஒரு பெண்ணைக் குறித்து எண்ணமாவது கடவுளுக்கு இருந்திருக்க வேண்டும் என்பது. தெளிவாகிறது.

ஆகவே எவ்வாறு மீட்பு ஒரு பெண்ணால் வந்தது போல மீட்பிற்கும் அப்பெண் வழியாகத்தானே செல்ல வேண்டும்.

ஆகவே கடவுள் முதலில் பெண்ணைத்தான் படைத்தார். அப்பெண் இறைவனின் தூயத்திருத்துவத்தின் இதயத்தில் இருந்தார். அதனால் அப்பெண் தூய்மையாக இருந்தார். பாவம் செய்யாதவராக, அமல உற்பவமாக இருந்தார். உரிய காலத்தில் அவர் பூமியில் பிறந்தார். அவர் வழியாக மீட்பரும் பிறந்தார். மனிதன் தோன்றும் முன்பே அவர் பிறந்ததால் அவரிடம் ஜென்மபாவம் இருக்கவில்லை.

தொடக்க நூலில் தமது படைக்கும் பணியைத் தொடங்கிய கடவுள் மனிதனைப் படைக்கும் முன்பே மனிதன் செய் யப்போவதை அறிந்தி ருந்ததால் பெண்ணைப் பற்றி நினைத்திருப்பார். ஆகவே கடவுள் முத லில் அப்பெண்ணைத்தான்

படைத்தார். அப்பெண் இறைவனின் தூயத்திருத்துவத்தின் இதயத்தில் இருந்தார். அதனால் அப்பெண் தூய்மையாக இருந்தார். பாவம் செய்யாதவராக, அமல உற்பவமாக இருந்தார். உரிய காலத்தில் அவர் பூமியில் பிறந்தார். அவர் வழியாக மீட்பரும் பிறந்தார். மனிதன் தோன்றும் முன்பே அவர் பிறந்ததால் அவரிடம் ஜென்மபாவம் இருக்கவில்லை. இறைவனின் காலம் நித்திய அருள் ஆசியின் காலமாகும் (கெய்ரோஸ்). எனவே மீட்பை அளிக்கும் பெண்ணின் பிறப் பானது நமது கால அளவிற்கு அப்பாற்பட்டதாகும். எனவே இப்பெண்ணின் பிறப்பானது ஓர் ஆன்மீக பிறப்பாகும். அது உலக படைப்பிற்கு முற்பட்டதாகும்.

## 1.2. எசா 7:14 ன்படி....

ஆகவே தொ.நூ 3:15ல் கூறப்பட்ட பெண் வெறுமனே ஓர் அடையாளம் அல்ல. அவர் கன்னிமரியாவேதான். மேலும் இயேசு உல கிற்கு தோன்றுவதற்கு 700 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்த இறை வாக்கினர் எசாயா பின்வருமாறு எதிர்கூறல் கூறுகிறார். "இதோ கருவுற் றிருக்கும் இந்த இளம் பெண் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப்பாள். அக்குழந்தைக்கு அவள் 'இம்மனுவேல்' என்று பெயரிடுவாள்" எசா 7:14. இந்த இளம் பெண்தான் புனித கன்னி மரியாதான் என்பது மரியிய லாளர்களின் கருத்து. மேலும் இந் நிகழ்வானது பெண்ணின் அதாவது ஓர் தாய்மையின் முக்கிய பங்கையும் எடுத்துரைக்கின்றது.

## 1.3. மீக்கா 5:2,3 ன்படி....

மேலும் எசாயாவின் இந்த பெண்ணைப் பற்றிய எதிர்கூறலானது இறைவாக்கினர் மீக்கா 5:2,3 இலும் உயிருட்டம் பெறுகின்றதை காண லாம். "நீயோ, எப்ராத்தா எனப்படும் பெத்லகேமே! யூதாவின் குடும்பங் களுள் மிகச் சிறியதாய் இருக்கிறாய்! ஆயினும், இஸ்ராயேலில் என் சார் பாக ஆளப்போகிறவர் உன்னிடமிருந்தே தோன்றுவார்; அவர் தோன்றும் வழிமரபோ ஊழிஊழிக் காலமாய் உள்ளதாகும் ஆதலால் பேறுகால வேதனையில் இருப்பவள் பிள்ளை பெறும்வரை அவர் அவர்களைக் கைவிட்டுவிடுவார்". இங்கே "அவள் பிள்ளை பெறுவாள்" என்ற எசாயா வின் கருத்திற்கேற்ப மீக்கா மெசியாவின் வருகையை இஸ்ராயேல் மக்கள் எதிர்பார்த்திருப்பதையும், மீண்டும் தாய்மையின் முக்கிய பங்கையும் எடுத்து கூறிநிற்கின்றார்.

## 1.4. எரே 31:22 ன்படி....

மேலும், எரே 31:22 ல் கூறப்படு கின்ற வசனங்களும் மரியாவைக் குறிப்பனவாக அமைகின்றன. "நம் பிக்கைத் துரோகம் செய்த மகளே! இன்னும் எத்தனை காலம் நீ அலைந்து திரிவாய்? ஆண்டவரா கிய நான் விந்தையாக ஒன்றை உல கில் படைத்துள்ளேன். ஒரு பெண் தன் கணவனைப் பாதுகாக்கிறாள்" மேலும் பழைய ஏற்பாட்டு நூல்களின் நீதி மொழி கள், உடன்படிக்கையின் பேழையிலும், யூடிற், எஸ்தர் போன்ற நூல்களிலும் மரியா முன்னறிவிக்கப்படுவதாக் கொள்ள முடியும்.

"நம்பிக்கைத் துரோகம் செய்த மகளே! இன்னும் எத்தனை காலம் நீ அலைந்து திரிவாய்? ஆண்டவராகிய நான் விந்தையாக ஒன்றை உலகில் படைத்துள்ளேன். ஒரு பெண் தன் கணவனைப் பாதுகாக்கிறாள்"

## (2). புதிய ஏற்பாடு நற்செய்தி நூல்களில் மரியா

புதிய ஏற்பாட்டு நற்செய்தி நூல்களில் நற்செய்தியாளர்கள் மரியாவைப்பற்றி அவ்வளவு பெரிதாக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. மாறாக அவர்களின் கரிசனையெல்லாம் எவ்வாறு இயேசுக் கிறிஸ்து மீட்பைக் கொணர்ந்தார் என்பதாகும். என்றாலும் மரியாவின் உருவமானது எப்பொழுதும் இயேசுவோடு பிரகாசித்ததைக் காணலாம். ஆகவே நற்செய்தி ஏடுகளில் மரியாவின் ஆளுமையையும் மீட்பு வரலாற்றில் அவரின் பங்களிப்பையும் நோக்கும் போது பின்வரும் பகுதிகள் முக்கியம் பெறுகின்றன.

- இயேசுவின் குழந்தைப் பருவ விபரிப்புக்களில்: மத் 1:2, லூக் 1:2
- இயேசுவைத் தேடி மரியாவும், இயேசுவின் சகோதரர்களும் வந்த நிகழ்வு: மாற் 8:31-35, மத் 12:46-50, லூக் 8:19-21
- இயேசுவினுடைய தாயையும், சகோதரர்களையும், சகோதரிகளையும் பற்றி நசரேத்தூர் மக்கள் கதைத்தது: மாற் 6:1-3, மத் 13:53-55.
- கானாவூர் திருமணத்தில் மரியா திருமண குடும்பத்திற்காக இயேசுவிடம் வேண்டியது: மாற் 6:1-3, மத் 13:53-55.
- இயேசுவும், அவருடைய சீடர்களும் கப்பர்நகூமில் சிறிது காலம்

தங்கியபோது அவருடைய தாயும் குறிப்பிடப்படுகிறார். யோவா 2:12.

- இயேசு சிலுவையில் தொங்கியபோது அவருடைய தாயை சீடர்களுக்கு தாயாக கொடுத்தது யோவா: 19:25-22.

## 2.1. மாற்கு நற்செய்தியாளரின் கருத்துப்படி........

இவர் தன்னுடைய நற்செய்தியில் இயேசுவை "இவர் தச்சன் அல்லவா! மரியாயின் மகன் தானே!" (மாற் 6:3). இதன் வழியாக மரியாவின் மகன் இயேசு என்பதை மாற்கு தெளிவுபடுத்துகிறார். மாற்கு நற்செய்தியானது இயேசுவின் எளிமையான வரலாற்றை நினைவு படுத்துவதுடன் மரியாவின் கன்னித்தன்மையையும் உறுதிப்படுத்துகிறது.

## 2.2. மத்தேயுவின் கருத்துப்படி

மத்தேயு தன்னுடைய நற்செய்தியில் அதிகாரங்கள் 1-2 களில் மரியாவைப்பற்றி பல கருத்துக்களை தெளிவுபடுத்துகின்றார். இயேசுவின் மூதாதையர் பட்டியல் 1:1-17, இல் 16ஆம் வசனம் மரியாவிடம் பிறந்தவரே கிறிஸ்து என்று குறிப்பிடுகின்றது.

- கன்னியின் கருத்தரிப்பு: 1:18-25, இதில் 23ஆம் வசனம் கன்னி கருவுற்று ஓர் மகனைப் பெற்றெடுப்பாள்.
- மரியா இயேசுவை கருத்தாங்கியது: 1:25
- மரியா எலிசபேத்தை சந்தித்தது.
- இயேசுவின் பிறப்பு: 2:1,12.
- இயேசுவை காணிக்கையாக கோவிலில் ஒப்புக் கொடுத்தது.

> *இயேசுவின் மூதாதயரின் பட்டியலைப் பார்க்கும் போது அங்கே பெண்களுக்கு இடமில்லை ஆனால் இவர்களின் பெயரை நாம் காணலாம். தாமார், இராகாப், றூத், உரியாவின் மனைவி போன்றோர். அவர்கள் நால்வரும் பாவிகள் மற்றும் புறவினத்தவர்கள். ஆனால் மெசியாவினுடைய வருகையை முன்னிட்டு தொடர்புடையவர்கள்.*

இங்கே நாம் இயேசுவின் மூதாதயரின் பட்டியலைப பார்க்கும் போது அங்கே பெண்களுக்கு இட

மில்லை ஆனால் இவர்களின் பெயரை நாம் காணலாம். தாமார், இராகாப், றூத், உரியாவின் மனைவி போன்றோர். அவர்கள் நால்வரும் பாவிகள் மற்றும் புறவினத்தவர்கள். ஆனால் மெசியாவினுடைய வருகையை முன்னிட்டு தொடர்புடையவர்கள்.

## 2.3. லூக்காவின் கருத்துப்படி

மரியா இயேசுவின் குழந்தைப்பருவ உரைகளில் இடம்பெறுவதைக்காணலாம். அதாவது கபிரியேல் வானதூதரின் மங்கள வார்த்தை, இயேசுவின் பிறப்பு, எலிசபேத்தை சந்தித்தல், குழந்தை இயேசுவைக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தல் மற்றும் இயேசுவை கோவிலில் கண்டுபிடித்தல் போன்ற நிகழ்வுகளில் காணலாம்.

## 2.4. யோவானுடைய கருத்துப்படி

புனித யோவான் மரியாவைப் பற்றி கூடிய இறையியல் நோக்குடன் விபரிக்கின்றார். மரியாவுடைய கன்னித்தன்மையை (1:13) பற்றியும், மரியா எவ்வாறு இயேசுவினுடைய பணிவாழ்வில் ஒரு பங்காளியாகவும், ஆரம்ப கர்த்தாவாகவும் செயற்பட்டார் என்பதை கானாவூர் திருமணத்தின் போதும் (2:1-11) மேலும் இயேசு எப்பொழுதும் அன்னை மரியாவை தம் சீடருடன் கூட்டிச் செல்கிறார்; அதனால் மரியா தன் மகனுடைய சீடருடனும் கொண்டிருந்த ஒருமித்த தன்மையையும் (2:12), யூதர்கள் இயேசுவை யோசேப்பின் மகன் என்ற கூறி மரியாவின் கன்னிமையைப் பற்றி தப்பான கருத்துக் கொண்டிருந்த போது (6:42) யோவான் மரியாவின் பங்களிப்பு என்ன என்பதை தன்னுடைய நற்செய்தியில் விளக்கியுள்ளார். ஆக மொத்தம் இயேசுவின் பிறப்பிலிருந்து சிலுவையில் இயேசு தொங்கும் வரையும் அன்னை மரியாவின் தடயங்களை நாம் தெளிவாக நற்செய்தியில் காணலாம்.

இயேசுவின் பிறப்பிலிருந்து சிலுவையில் இயேசு தொங்கும் வரையும் அன்னை மரியாவின் தடயங்களை நாம் தெளிவாக நற்செய்தியில் காணலாம்.

## (3).திருவெளிப்பாட்டில் மரியா

திருவெளிப்பாட்டில் உலக மீட்பரை பெற்றெடுத்தவள் புனித கன்னி மரியா தான் என்று பாப்பிறை 6ஆம் சின்னப்பர் தமது "சிக்னம் மாக்னம்" (பெரிய அடையாளம்) என்ற சுற்றுமடலில் குறிப்பிடுகின்றார்.

கதிரவனை ஆடையாக அணிந்திருந்த பெண்ணின் தலைமீது பன்னிரு விண் மீன்கள் அடங்கிய கீரீடம் இருந்தது. "கீரீடம் அரசுரிமையின் அடையாளம்". அதாவது இறைமக்களின் இதயத்தில் தான் தாயாக வீற்றிருப்பதன அடையாளம் தான்.

கதிரவனை ஆடையாக அணிந்திருக்கும் பெண் பத்திமா மாதாதான் என்றும் குறிப்பிடுகிறார். மேலும் அருளாளர்களின மரியா இயக்கத்திற்கு அருட்திரு ஸ்டெ.ஃபானோ கோபி வழியாக அளித்த செய்தியில் கன்னிமரியா தாமே திருவெளிப்பாட்டு கன்னி என்று வெளிப்படுத்தியுள்ளார். மேலும் பழைய ஏற்பாட்டில் எசாயா 7:14 குறிப்பிட்ட "இளம் பெண்", தொடக்க நூல் 3:15 குறிப்பிட்ட 'பெண்'ணும் திருவெளிப்பாட்டின் 12:1-3 குறிப்பிடப்படுகின்ற கதிரவனை ஆடையாக அணிந்திருந்த பெண்ணையே குறிப்பிடுகின்றன. அப்பெண்ணின் தலைமீது பன்னிரு விண்மீன்கள் அடங்கிய கீரிடம் இருந்தது. "கீரிடம் அரசுரிமையின் அடையாளம்" அதாவது இறைமக்களின் இதயத்தில் தான் தாயாக வீற்றிருப்பதன் அடையாளம்தான்.

ஆகவே திருவிவிலியத்தின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை மரியாவைப்பற்றிய ஆதாரங்களை நாம் அறிகின்றோம். ஆகவே அன்னை மரியா கடவுள் உலகை படைப்பதற்கு முன்பே திரித்துவத்துடன் நிலை பெற்றிருந்தார் என்பதையும் ஒரு விஷேட பணிக்காக முன்குறித்துவைக்கப்பட்டார் என்பதையும் அறிய முடிகிறது. தூய அன்னையே திருவிவிலியத்தின் கன்னியே உமது புகழ் எங்கும் ஓங்குக.

தூய அன்னையே திருவிவிலியத்தின் கன்னியே உமது புகழ் எங்கும் ஓங்குக.

# மரியா இறைவனின் அன்னை

அருட்சகோதரன் அ.ரஜனிகாந்.

## முன்னுரை

திருச்சபையிலே "மரியன்னை இறைவனின் தாய்" என்ற மறை உண்மை மிகமுக்கியமானதும், மறுக்க முடியாததுமான ஒரு உண்மையாகும். திரு விவிலியமும், கிறிஸ்தவ பாரம்பரியமும், திருச்சபையின் அதிகார பூர்வமான படிப்பினையும் இவ் மறை உண்மையை மென்மேலும் வலியுறுத்துவதாக அமைகின்றன. இவ் உண்மையானது மீட்புத் திட்டத்திலல் மரியாவின் தனித்துவமானதும், இன்றியமையாததுமான பங்கை மிகவும் வலியுறுத்தவதுவதாகவும் அமைகின்றது. மரியாவின் தனிப்பெரும் பேறு அவள் மீட்பரின் தாய் என்பதாகும். மரியாவின் அமல உற்பவம், மற்றும் விண்ணேற்பு என்ற இருபெரும் சலுகைகளுக்கு அடித்தளமாக அமைவது அவள மீட்பரின் தாய் என்ற உண்மை யாகும். கிறிஸ்து இறைவனாகவும், மனிதராகவும் இருக்கிறார் என்பது நமது அடிப்படையான விசுவாசமாகும். ஆகவே கிறிஸ்து மரியாவிடம் பிறந்தார் என்ற உண்மை அவள் உண்மையிலேயே இறைவனின் அன்னை என்ற உண்மையைத் தெளிவுபடுகின்றது. ஏனெனில் தாயின் பெருமை அவள் ஈன்றெடுத்த குழந்தையில் பிரதிபலிக்கின்றது. இவ்வாறே மரியாவின் பெருமை அவர் ஈன்றெடுத்த இயேசுக் கிறிஸ்துவில் மிளிர்கிறது. புனித டியோனிசியஸ் அலெஸ் "மரியா ஒரு செம்மறி, அவள் இறைவனின் திருச் செம்மறி யாகிய கிறிஸ்து உலகின் பாவங்களைப் போக்க இந்த அவனியிலே அவதரிக்க தன் உதிரத்தை தாரைவார்த்துக் கொடுத்தாள்." என்று கூறுகிறார். இருப்பினும் "மரியா இறைவனின் அன்னை" என்ற உண்மையை சிலர்

"மரியா ஒரு செம்மறி, அவள் இறைவனின் திருச்செம்மறியாகிய கிறிஸ்து உலகின் பாவங்களைப் போக்க இந்த அவனியிலே அவதரிக்க தன் உதிரத்தை தாரைவார்த்துக் கொடுத்தாள்."

ஏற்றுக் கொள்ளத் தயங்கியதன் விளைவாக, தொடக்கத் திருச்சபை வரலாறுகளில் பல சர்ச்சைகளும், சந்தேகங்களும் ஏற்பட்டமை வரலாற்று உண்மை! ஆனால் எபேசுத் திருச்சங்கம் (431) தொடங்கி இன்றுவரை "மரியா இறைவனின் அன்னை" என்ற உண்மை திருச்சபையின் பல பாகங்களிலும் வலியுறுத்தப்பட்டு, பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு உண்மையாகும். அதன் அடிப்படையில் மரியா எவ்வாறு இறைவனின் அன்னையாகிறாள் என்பதை நாம் விரிவாக ஆராய்வோம்.

## மரியா எவ்வாறு இறைவனின் அன்னையாகிறாள்.....

"மரியா இறைவனின் அன்னை" என்பது கிறிஸ்து இயல் (Christology) பிண்ணணியில் எழுந்த ஒரு கோட்பாடாகும்.

தொடக்கத் திருச்சபையில் கிறிஸ்துவின் இறை மனித சாயல்களை சரியாக வரையறுத்து விசுவாசிக்க முயன்ற சூழலில் சில முரண்பாடுகளும், தப்பான விளக்கங்களும் கிறிஸ்தவ விசுவாசத்திற்கு எதிராக தோற்றம் பெற்றன. இந்த ரீதியில் கிறிஸ்து பற்றி ஏற்பட்ட முரண்பாடுகள் மரியா இறைவனின் அன்னை என்ற உண்மையை ஏற்றுக் கொள்வதிலும் பல முரண்பாடுகளை ஆரம்பத்தில் ஏற்படுத்தியது. இந்த வகையில் கொண்ஸ்தாந்திநோபிள் நகர ஆயரும், குல முதுவருமாகிய நெஸ்தோரியுசு என்பவர், "இறைவன் மனிதனானார்" என்று கி.பி 325ல் நிசா திருச்சங்கம் வரையறுத்த விசுவாச உண்மையை ஏற்க மறுத்தார். இவரின் கருத்துப் படி, இறைவன் மனிதனானார், அவருக்கு இரண்டு சாயல்; ஒன்று இறைசாயல் மற்றயது மனித சாயல், ஆனால் கிறிஸ்து வெறும் மனிதனே! அவரில் இறைத்தன்மை இருக்கவில்லை என வலியுறுத்தினார். இதன்படி "மரியா இறைவனைப் பெற்றெடுக்கவில்லை; ஒரு படைப்பு தன்னைப் படைத்தவரை பெற்றெடுக்க இயலாது; மரியா, இறைவனின் கருவியாகி ஒரு மனிதனையே பெற்றெடுத்தார், மரியாவின் வயிற்றில் உருவானது கடவுள் அல்ல, மனிதனே, இம்மனிதனை கடவுள்

> "மரியா இறைவனைப் பெற்றெடுக்கவில்லை;
> ஒரு படைப்பு தன்னைப் படைத்தவரை
> பெற்றெடுக்க இயலாது, மரியா,
> இறைவனின் கருவியாகி ஒரு மகனையே
> பெற்றெடுத்தார், மரியாவின் வயிற்றில்
> உருவானது கடவுள் அல்ல, மனிதனே,
> இம்மனிதனை கடவுள் தமக்கு சொந்தமாக்கி
> கொண்டார் ஏற்றுக் கொண்டவர் கடவுள்

தமக்கு சொந்தமாக்கி கொண்டார்; ஏற்றுக் கொண்டவர் கடவுள் என்பதால் ஏற்றுக்கொள்ளப்பட்டவரும் கடவுள் என அழைக்கப்படுகிறார். ஆகவே மரியா இறைவனின் அன்னை என்று அழைப்பது தவறாகும் மாறாக கிறிஸ்துவின் அன்னை என்றே அழைக்கப்பட வேண்டும் என்ற தப்பான போதனையை முன்வைத்தார்.

ஆனால் இந்தப் போதனை முற்றிலும் தவறானது என்ற கண்டனக் குரல் கி.பி.431 ஆம் ஆண்டு எபேசுத் திருச்சங்கத்திலே அலெக்சாந் திரியா நகர ஆயர் புனித சிரில் என்பவரினால் எழுப்பப்பட்டது. இந்த சங்கம் கிறிஸ்து மெய்யான இறைவன், மெய்யான மனிதன்; "ஒரே ஆள் இரண்டு சாயல்கள்" (One Person, two natures) என்ற திருச்சபையின் விசுவாச உண்மையை வலியுறுத்தியது. அதன் பின்னணியில் மரியா உண்மையிலேயே இறைவனின் அன்னை எனக் குறிப்பிட்டு, உறுதிப்ப டுத்தி இச்சிக்கலுக்கு ஒரு முற்றுப்பள்ளி வைத்தது.

"இம்மானுவெல் உண்மையிலேயே கடவுள். எனவே பேறுபெற்ற கன்னி இறைவனின் தாய். ஏனெனில் கடவு ளிடம் இருந்து பிறந்த வார்த்தை யானவரை ஊன் உடலில் ஈன்றெடுத த்தார். ஆகவே எவர் ஒருவர் இந்த உண்மையை ஏற்க மறுக்கிறார் களோ! அவர்கள் சபிக்கப்பட்ட வர்" எனச் சங்கம் வெளிப் படையாக வலியுறுத்தியது.

> **"இம்மானுவெல் உண்மை யிலேயே கடவுள் எனவே பேறுபெற்ற கன்னி இறைவனின் தாய்" ஏனெனில் கடவுளிடம் இருந்து பிறந்த வார்த்தையானவரை ஊன் உடலில் ஈன்றெடுத்தார்.**

"மரியா இறைவனின் தாய் என்பதற்கு எபேசுத் திருச்சங்கம் பயன்படுத்தும் கிரேக்கச் சொல் 'தெயோட்ட கோஸ்' (Theotokos) 'தெயோ' (Theo) என்றால் கடவுள் 'டோக்கோஸ்' (Tokos) என்றால் ஈன்றெடுத்தவள் என்று பொருள்படும்.

மரியா இறைவனின் தாய் என்னும் போது அவர் இயேசுக் கிறிஸ்துவின் தாய் என்பது பொருளல்ல, ஆனால் உண்மையாக கடவு ளாக இருக்கிறவரை ஈன்றெடுத்த தாய் என்பது பொருளாகும். மரியா ஈன்றெடுத்த இயேசுக்கிறிஸ்து உண்மையான கடவுள், முழுமையான மனிதர். இயேசுவிடம் இறை இயல்பு, மனித இயல்பு ஆகிய இரண்டு இயல்புகள் இருப்பினும் அவர் ஒரே ஆள், அதாவது வார்த்தையானவர் திரித்துவத்தின் இரண்டாம் ஆள்; மரியா இந்த இரண்டாம் ஆளுக்கு

> மரியா இறைவனின் தாய் என்னும் போது அவள் இயேசுக்கிறிஸ்துவின் தாய் என்பது பொருளல்ல, ஆனால் உண்மையாக கடவுளாக இருக்கிறவரை ஈன்றெடுத்த தாய் என்பது பொருளாகும்

மறு உருககொடுத்தவள். இங்கே கடவுள உண்மையாகவே மனிதனானார் என்பதைப் புனித யோவான் தன் நற்செய்தியில குறிப்பிடும் போது, "தொடக்கத்தில் வாக்கு இருந்தது, அவ்வாக்கு கடவுளோடு இருந்தது, அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது......... வாக்கு மனிதனானார் நம்மிடையே குடிகொண்டார்" (யோவா.1:1,14). எனக் குறிப்பிடுகிறார்.

இதன் அடிப்படையில் கல்சிதோன் (கி.பி.451), இரண்டாம் காண்ஸ் சாந்திநோபிள் (கி.பி.553) ஆகிய திருச்சங்கங்களும் "மரியா இறைவனின் அன்னை" என்ற எபேசுத் திருச்சங்கப் போதனையை மீண்டும் வலியுறுத்தின. இந்த உண்மையின் ஒளியிலே வத்திக்கான் திருச்சங்கமும், "மரியா உண்மையிலேயே இறைவனும், மீட்பருமானவரின் தாய் என ஏற்றுக் கொள்ளப்பெற்று பேறு பெறுகிறாள்" (திருச்சபை 53) என்றும் "தூய கன்னி இறைவனின் தாய் என்னும் கொடையாலும், அலுவலாலும் மீட்பரான தம் மகனோடு ஒன்றித்திருக்கிறார், என்றும் அறிக்கையிட்டு (திருச்சபை 63)மரியா இறைவனின் தாய் என்ற கத்தோலிக்க விசுவாசக் கோட்பாட்டை உறுதி செய்துள்ளது.

## திருவிவிலியத்தில் மரியா இறைவனின் அன்னையாக...

மரியா இறைவனின் தாய் என்ற உண்மையைத் திருவிவிலியம் நமக்கு சிறப்பாக வலியுறுத்துகிறது. குறிப்பாக புதிய ஏற்பாட்டில் நான்கு நற்செய்தியாளர்களும் மரியா உண்மையில் இறைவனின் தாய் என்ற உண்மையை வலியுறுத்துகின்றனர். (மத்தேயு ·2:18, 2:11, 12:46, 13:55, மாற்கு 3:31, லூக் 2:34,48,51, 8:19, யோவான் 2:5,19:25)

(மாற்கு 6:3) இங்கு மாற்கு நற்செய்தியாளர் மரியாவின் மகன் இயேசு 6:3 என குறிப்பிடுகிறார். மேலும் மரியா எலிசபேத்தைச் சந்தித்தபோது "என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் வாய்ப்பு பெற்றது எப்படி" என எலிசபெத் அறிக்கையிடுகிறார்: லூ 1:43 "ஆண்டவர்" என்ற சிறப்புப் பெயர் இறைவனுக்கு மட்டும் உரித்தானது. எனவே மரியா இறைவனின் தாய் என்றால் அவர் இறைவனின் உண்மையான தாய் என்பது மறுக்க முடியாது என்பதாகும்.

புனித பவுல் கூட கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்தில் "காலம் நிறைவேறிய போது கடவுள் தம் மகனை பெண்ணிடம் பிறந்தவராக அனுப்பினார்'' என்று குறிப்பிட்டு. ஒரு பெண்ணின் வழியாக அதாவது மரியாவின் வழியாகவேஇறைவன் மனிதரானார், என்பதை புனித பவுல் ஐயமின்றி அறிவித்து அறிக்கையிடுகிறார். ஆகவே மரியா இறைவனின் உண்மையான தாய என்பது மறுக்கப்படாத உண்மையாகும். இதைத்தான் திருத்தூதர்களின் விசுவாச அறிக்கையும் "கன்னி மரியிடமிருந்து பரிசுத்த ஆவியினால் மறு உடல் எடுத்து மனிதனானார்'' என்று இயேசுவின் பிறப்பை கன்னிமரியாவின் தாய்மையோடு தொடர்புபடுத்தி வரையறுத்துள்ளது.

"காலம் நிறைவேறிய போது....... கடவுள் தம் மகனை பெண்ணிடம் பிறந்தவராக அனுப்பினார்! ஒரு பெண்ணின் வழியாக அதாவது மரியாவின் வழியாகவே இறைவன் மனிதரானார், என்பதை புனித பவுல் ஐயமின்றி அறிவித்து அறிக்கையிடுகிறார்.

## மரியா திருச்சபையின் தாய்

மரியா இறைவனின் மீட்புத்திட்ட வரலாற்றில் தன்னை ஆண்டவரின் ஒரு அடிமையாக, கருவியாக, சுதந்திரமாகவும், தாழ்மையாகவும் அர்ப்பணித்தார். எனவே மரியாவின் "ஆம்" என்ற பணிவான பதிலளிப்பு அவரை இறைவனின் மீட்புத்திட்டத்தில் ஒரு பங்காளியாக்கியது. இந்த இறையரசுப்பணியை தொடர்ந்தாற்ற கிறிஸ்து நிறுவியதே நம் பரிசுத்த திருச்சபையாகும். ஆகவே திருச்சபையின் இறையரசு நோக்கிய பயணத்தில் கடவுளின் மீட்புத் திட்டம் மரியன்னையிலும் வழிப்படுத்தப்படுகிறது. இதைத் தான் புனித கிப்போலிற்றஸ் ''கடவுளின் மனிதனை மீட்கும் திட்டத்தில் திருச்சபை மேற்கொள்ளும் பணி மரியன்னை காட்டிச் சென்ற முன்மாதிரிகையின் தொடர்ச்சியாகும். திருச்சபை தோற்றம் பெற்ற பெந்தக்கோஸ்தே தினத்தன்று, ஆவியானவர் திருத்தூதர்கள் மேல் இறங்கிய போது மரியாவும் அவர்களோடு இருந்து இறைவேண்டலில் ஈடுபட்டிருந்தார் என திருத்தூதர்கள் பணி 2ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்படுகிறது. இங்கே திருச்சபையின் ஆரம்பத்திலேயே மரியா அங்கே ஒரு தாயாக, திருச்சபையின் தாயாக தரப்படுகிறாள்". என்று கூறுகின்றார்.

புனித கிப்போலிற்றஸ் கூறுகிறார்:" கடவுளின் மனிதனை மீட்கும் திட்டத்தில் திருச்சபை மேற்கொள்ளும் பணி மரியன்னை காட்டிச் சென்ற முன்மாதிரிகையின் தொடர்ச்சியாகும்.

இந்த திருச்சபை என்ற உடலாகிய கிறிஸ்துவிற்கு மரியா உருக்கொடுத்ததால் மரியா திருச்சபையின் தாயாக மாற்றம் பெறுகிறார், ஆகவே நாமும் கிறிஸ்துவை உடலின் உறுப்புக்களாக தாங்கி வாழும் போது நமக்கும் மரியா ஒரு பாசமிகு அன்னையாக தரப்படுகிறார்.

திருச்சபை என்பது கிறிஸ்துவின் உடல் நாம் எல்லோரும் அதன் உறுப்புக்கள் ஆகவே இந்த திருச் சபை என்ற உடலா கிய கிறிஸ்துவிற்கு மரியா உருக் கொடுத்ததால் மரி யா திருச்சபையின் தாயாக மாற்றம் பெறுகிறார்.

ஆகவே நாமும் கிறிஸ்துவை உடலின் உறுப்புக்களாக தாங்கி வாழும் போது நமக்கும் மரியா ஒரு பாசமிகு அன்னையாக தரப்படுகிறாள். இதைத்தான் கல்வாரியில் இயேசு தம்தாயை நம் அனைவரின் தாயாக கொடுத்த நிகழ்வு வலியுறுத்துகிறது.

## முடிவுரை

மரியா இறைவனின் தாயாகவும், நம் திருச்சபையின் தாயாகவும் இருக்கிறார் என்பது நமது விசுவாச உண்மையாகும். திருச்சபையில் அன்றும், இன்றும் யாவிலும் மேலாக "விசுவாசத்தால் பேறுபெற்றவர்" மரியாதான். ஏனெனில் அவளே முதல் முதலில் விசுவாசித்தவள். எருசலேமில் மாடி வீட்டில் திருத் தூதர்களோடு தங்கியிருந்த போது, மங்கள வார்த்தையில் ஆரம் பித்த விசுவாசமானது அன்று உறுதி யாக்கப்பட்டதை அவர் உணர்ந்தார். திருச்சபையில் பலதரப்பட்ட பணிகளும், வழிபாடுகளும், திருச்சடங்குகளும், திரு வருட்சாதனங்களும் எமக்கு தரப்படலாம். ஆனால் கிறிஸ்துவின் பிரசன்னம் அதில் இல்லை என்றால் நாம் செய்யும் அனைத்தும் வீணானது. ஆனால் மரியா கிறிஸ்துவையே தன் உதரத்தில் தாங்கி கிறிஸ்து உறையும் நற்கருணைப் பேழையாக வாழ்ந்தவர். இறைவனைத் தாங்கிய கன்னி அவரின் தாயாகி, அவரின் உடலாகிய திருச்சபையில் தாயாகி அவரின் பிரசன்னத்தை என்றும் வெளிப்படுத்தும் அன்னையாகின்றார்.

மரியா கிறிஸ்துவையே தன் உதரத்தில் தாங்கி கிறிஸ்து உறையும் நற்கருணைப் பேழையாக வாழ்ந்தவள். இறைவனைத் தாங்கிய கன்னி அவரின் தாயாகி, அவரின் உடலாகிய திருச்சபையில் தாயாகி அவரின் பிரசன்னத்தை என்றும் வெளிப்படுத்தும் அன்னையாகின்றாள்.

# அன்னை மரியா என்றும் கன்னி

அருட்சகோதரன் பெ. இயூஸ்ரஸ்

தாய்மையும் கன்னிமையும் மரியாவில் பிரிக்கப்பட முடியாத ஒன்று. மரியாவின் தாய்மை அவளது தனிப்பட்ட ஒரு அழைப்பு மாத்திரமல்ல மாறாக மீட்பு வரலாற்றில் மனிதனின் பங்களிப்பையும் சுட்டிக் காட்டுகின்றது. எனவே மரியாவின் கன்னிமை கடவுள் படைப்புக்களோடு கொண்டுள்ள தொடர்பையும் குறிக்கின்றது. மரியாவின் வயிற்றில் இயேசு கருத்தரித்தலில் இருந்து எமது மீட்பு ஆரம்பமாகின்றது. இது மனித முயற்சியின் பலன் அல்ல மாறாக தூய ஆவியின் வழியாக இறைவன் அளிக்கும் ஒரு கொடையாகும். கடவுளின் சொல்லுக்கும் அருளுக்கும் படைப்புகளின் திறந்த மனப்பான்மையை நாம் மரியாவின் கன்னிமையில் தியானிக்கிறோம். அத்தோடு நாம் கடவுளில் முழுமையாக தங்கியிருக்கின்றோம் என்பதையும் குறிக்கின்றது. எனவே மரியா திருச்சபைக்கு ஒரு முன் மாதிரியாக இருக்கின்றார்.

> கடவுளின் சொல்லுக்கும் அருளுக்கும் படைப்புகளின் திறந்த மனப்பான்மையை நாம் மரியாளின் கன்னிமையில் தியானிக்கிறோம். அத்தோடு நாம் கடவுளில் முழுமையாக தங்கியிருக்கின்றோம் என்பதையும் குறிக்கின்றது.

## சமயங்களின் வரலாற்றில் கன்னிமை

பல கலாசாரங்களில் கன்னிமை சமய முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக விளங்குகின்றது. இது வெறுமனே ஒரு பெண்ணினதோ அல்லது ஆணினதோ உடல்நிலை சார்ந்தது அல்ல மாறாக இது ஒரு சிறப்பான சமயச் செயற்பாட்டுக்கு ஒருவரைத் தூண்டும் தூய்மை நிலையாகும். இதற்கு சுய கட்டுப்பாடு இன்றியமையாதது. இது ஆன்மிக வளர்ச்சிக்கு மிக அவசியமானது.

மத்தியதரைப் பகுதிகளின் சமயக் கருக்கள் கிறிஸ்தவ சமயத்தில் கன்னிமை பற்றி அறிந்து கொள்வதற்கு பின்னணியாய் இருக்கின்றன. கன்னிமை தாய் கடவுள்களோடு தொடர்புபடுத்தப்

கன்னிமை தாய் கடவுள்களோடு தொடர்புபடுத்தப் பட்டுள்ளன. கன்னிமை என்பது தன்னகத்தே எதுவித அர்த்தத்தையும் கொண்டிருக்கவில்லை மாறாக அது இளமையின் அரும்புதலில்தான் தங்கியுள்ளது.

பட்டுள்ளது. கன்னிமை என்பது தன்னகத்தே எதுவித அர்த்ததை யும் கொண்டிருக்க வில்லை. மாறாக அது இளமையின் அரும் புதலல்தான் தங்கி யுள்ளது. ஆகவே கன்னிமை என்று குறிப்பிடும் போது அது தன்னகத்தே விசேட சக்தி கொண்டுள்ளது.

## கன்னிமை என்றால் என்ன?

கன்னிமை உடலைச் சார்ந்த ஒரு பண்பு அல்ல. கன்னிமையை வாழ்க்கை நிலையாக தேர்ந்து கொள்வதற்கான எண்ணம், திருமண வாழ்க்கை, உடலுறவு பற்றிய தவறான அர்த்தத்தை கொண்டிருக்கக்கூடாது. ஒரு நபரோ அல்லது ஒரு இலட்சியமோ உன்னைக் கவர்ந்திழுப்பதன் காரணமாக உன்னையே முழுமையாக அர்ப்பணிப்பதே கன்னிமை. இது எம் முழுக்கவனத்தையும் சக்தியையும் ஈர்க்கின்றது.

திருச்சபை உலகியலான உடலுற வைத் தவிர்த்தல் மட்டுமே கன்னிமை எனக் குறிப்பிடவில்லை. ஆனால் முதலும் முடிவுமாக ஓர் உறுதியான ஆன்மீக மற்றும் சமயம் வழியாகக் கடவுளுக்குத் தன்னையே ஒரு பொருளாக அர்ப்பணம் செய்து முழு ஈடுபாட்டுடன் வாழ்வதை வெளிப்படுத்துகின்றது.

விவிலிய அடிப்படையில் ஒரு கன்னி எப்பொழுதும் திறந்த மனதுடனும் எல்லோருக கும் எல்லாமுமாக இருப்பார். கடவுளின் அன்பில் கவர்ச்சியுற்று பின் திருமண உறவில் ஈடுபடுதல் கையளித்தல் என்பது குடும்பம் என்ற குறுகிய வட்டத்தில் தன்னை நிறுத்தும் என்பதை அவனோ/அவளோ உணர்ந் திருக்கிறார். திருச்சபை உலகியலான உடலுற வைத் தவிர்த்தல் மட்டுமே கன்னிமை எனக் குறிப்பிடவில்லை. ஆனால் முதலும் முடிவுமாக ஓர் உறுதியான ஆன்மீக மற்றும் சமயம் வழியாகக் கடவுளுக்குத் தன்னையே ஒரு பொருளாக அர்ப்பணம் செய்து முழு ஈடுபாட்டுடன் வாழ்வதை வெளிப்படுத்துகின்றது.

# விவிலயத்தில் கன்னிமை

பழைய ஏற்பாட்டில் கன்னிமை ஒரு புண்ணியமாகக் கருதப்படவில்லை. மாறாக அது ஒரு சாபமாகக் கருதப்பட்டது. காரணம் என்னவெனில் கருவுறுதல் கடவுளின் கொடையாகக் கருதப்பட்டது. மலட்டுத்தன்மை தாழ்வாகவும் அத்தோடு வெட்கத்துக்குரிய தொன்றாகவும் விளங்கியது. பிதாபிதாக்களின் காலத்தில் இயேசுவின் முதாதையர்கள் மலட்டுத் தன்மையுள்ளவர்களாக இருந்தார்கள். உ+ம் சாராள் (தொ.நூ 11:30), இரேபேக்கா (தொ.நூ 25:20), எலிசபேத் (லூக் 1:7). "அவர்களுக்குப் பிள்ளை இல்லை; ஏனெனில் எலிசபேத்து கருவுற இயலாதவராய் இருந்தார்". மேலும் பழைய ஏற்பாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட இனமாகிய இஸ்ரேயேல் இனமும் கன்னிப் பெண்ணாக சித்தரிக்கப்பட்டுள்ளதை நாம் காணலாம். "கன்னிப் பெண்ணாகிய இஸ்ரயேலே! உன்னை நான் மீண்டும் கட்டியெழுப்புவேன்; நீயும் கட்டியெழுப்புவாய்; மீண்டும் என் மேளதாளங்களை நீ எடுத்துக் கொள்வாய்; மகிழ்ச்சியுற்றோர் போல நடனமாடிக் கொண்டு நீ வெளியேறுவாய்"(எரே 31:4).

**"சிலர் பிறவியிலே மண உறவு கொள்ள முடியாதவராக உள்ளனர். வேறு சிலர் மனிதரால் அந்நிலைக்கு ஆளாக்கப்படுகின்றனர். மற்றும் சிலர் விண்ணரசின் பொருட்டு அந்நிலைக்கு தம்மையே ஆளாகிக் கொள்கின்றனர். (மத் 19:12)**

பழைய ஏற்பாட்டு வரலாற்றுப் பின்னணியில் தான் நாம் புதிய ஏற்பாட்டில் கன்னிமையையும் நோக்க வேண்டும். புதிய ஏற்பாட்டில் பாலியல் தொடர்பான மனநிலை புராதன இஸ்ரயேல் மக்களுடைய பாரம்பரியத்தில் இருந்தே தோற்றம் பெறுகின்றது. இயேசு இவ்வுலகத்திற்கு வந்து இறையரசை நிறுவிய பின்னர் கன்னிமை பற்றி புதியதொரு பார்வை தோன்றியது. இறையரசின் பொருட்டு திருமணமாகாதவர்கள் பற்றி இயேசுவே பேசியிருக்கின்றார். **"சிலர் பிறவியிலே மணஉறவு கொள்ள முடியாதவராக உள்ளனர். வேறு சிலர் மனிதரால் அந்நிலைக்கு ஆளாக்கப்படுகின்றனர். மற்றும் சிலர் விண்ணரசின் பொருட்டு திருமணமாகாதவர்கள்."** (மத் 19:12)

கடவுள் இவ் உலகில் பிரசன்னமாயிருக்கிறார். ஆனால் அவர் மக்களை தன்னோடு சங்கமமாகும் இறுதி நிலைக்கு நடத்திச் செல்கின்றார். புதிய ஏற்பாட்டில் கன்னிமை என்பதன் அர்த்தம் எமக்குள் எல்லா பற்றுக்களையும் துறந்து இறையரசை நோக்கி பயணம் செய்து இறைவனோடு சங்கமமாகும் இறுதி நிலையை குறித்து நிற்கின்றது.

## மரியாவின் நிரந்தர கன்னிமை பற்றிய கோட்பாடு

'இறைவனின் அன்னை' என்ற கோட்பாட்டைப் போன்று இக்கோட்பாடும் கிறிஸ்தியல் சிந்தனை வளர்ச்சிப் பின்னணியில் தோன்றியது. முதலிரு நூற்றாண்டுகளில் யூத, ஞான உணர்வுக் கொள்கைகளின் பின்னணியில் தோன்றிய தோற்றக் கொள்கை கெதிராக திருச்சபை தந்தையர்கள் தொடர்ந்து போராட வேண்டியிருந்தது. புனித ஐஸ்ரின் இயேசுவின் கன்னிப்பிறப்பை வலியுறுத்திப் பேசுகின்றபோது பழைய ஏவாள், புதிய ஏவாள் உருவகத்தை, பழைய மனிதன், புதிய மனிதன் பற்றிய சிந்தனைச் சூழமைவில் கையாளுகின்றார். தொர்த்துலியன் கன்னிமையை ஆண் சம்பந்தப்பட்டதல்ல, பிறப்பு சம்பந்தப்பட்டதல்ல என்று குறிப்பிடுகின்றார். அலெக்சாந்திய கிளமெந்து இயேசு புதுமையான விதத்தில் 'மரியாவின் கன்னிமை சிதைவுபடாமல்' பிறந்தார் என்று குறிப்படுகின்றார். இத் திருச்சபைத் தந்தையர்கள் மரியா 'என்றும் கன்னி' என்ற விசுவாசக் கோட்பாட்டின் முன்னோடிகளாகின்றனர். ஒரிஜின் மரியாவின் கன்னிமையை 'நிலைக்கும் கன்னிமை' எனக் குறிப்பிடுகின்றார். இயேசுவின் பிறப்புக்கு முன்னும், பிறப்பின் போதும், பிறப்புக்கு பின்னும் மரியா கன்னியாக இருந்தார் என்று குறிப்பிட்டார். நீசா நகர கிரகோரி மரியாவின் கன்னிமையை மோசேயின் எரியும் புதர்ச் செடிக்கு ஒப்பிட்டார். செடி எரிந்தாலும் அது சாம்பலாகி விடவில்லை. அதைப் போல் அன்னை மரியா இயேசுவைப்



பெற்றெடுத்தாலும் அவரது கன்னிமை அழிந்து விடவில்லை என்று எழுதினார்.

கீழைத் திருச்சபைத் தந்தையர்களைப் போன்றே மேலைத் திருச்சபை தந்தையர்களும் (புனித அகுஸ்தீன், புனித அம்புரோஸ்) மரியாவின் கன்னிமையை ஏற்றுக் கொண்டனர். கி.பி 553இல் இரண்டாம் கொன்ஸ்தாந்திநோபிள் திருச்சங்க விசுவாச அறிக்கை மரியாவை ''எப்பொழுதும் கன்னி'' என்று அழைத்தது. கி.பி 649இல் கூடிய லாத்தரன் சங்கம் மரியவை 'கன்னி' 'முக்காலத்தும் கன்னி' என்றழைத்தது.

## மூன்று நிலைகளில் மரியாவின் நிரந்தர கன்னிமை

### (1). இயேசுவின் பிறப்பிற்கு முன் கன்னிமை

மரியா இயேசுவை கருத்தரிக்கும் முன்னும், கரித்தரித்த போதும் கன்னியாகவே இருந்தார். இதற்கான தெளிவான ஆதாரங்கள் விவிலியத்தில் நிறைவாகக் காணப்படுகின்றன. ''யோசேப்பே, தாவீதின் மகனே, உம் மனைவி மரியாவை ஏற்றுக் கொள்ள அஞ்ச வேண்டாம். ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால்தான்...'' (மத் 1:20) மரியாவின் கன்னிமை பற்றி திருச்சபையின் பாரம்பரியத்திலும் நிறைய ஆதாரங்கள் காணப்படுகின்றன.

### (2). இயேசுவின் பிறப்பின்போது கன்னிமை

இதன் அர்த்தம் என்னவென்றால் மரியா தனது உடல் மாசுபடாத வகையில் இயேசுவைப் பெற்றெடுத்தார் என்பதாகும். அத்தோடு பாரம்பரியம் சொல்கிறது மரியா ஏனைய பெண்களைப் போன்று பிரசவ வேதனைகளை அனுபவிக்கவில்லை என்று இதனை உறுதி செய்யும் விதமாக பின்வரும் இறைவாவாக்குப் பகுதி அமைந்துள்ளது. "ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஓர் அடையாளத்தை அருள்வார். இதோ, கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப்பாள்". (எசா7:14)

தொர்த்தலியன், கிளமென்ற், அம்புறோஸ், அகஸ்ரின் போன்றோர் இக் கோட்பாட்டை உறுதிப்படுத்தினர்.

## (3). இயேசுவின் பிறப்பின் பின் கன்னிமை

இதன் அர்த்தம் மரியா இயேசுவைப் பெற்றெடுத்த பின் தனது வாழ்நாள் பூராகவும் கன்னிமையோடு வாழ்ந்தாள் என்பதாகும். இதற்கு போதுமான ஆதாரங்கள் வேதாமத்தில் காணப்படவில்லையென்றாலும் ஜெறோம், அகஸ்ரின், ஒரிஜின் போன்றோர் இதனை உறுதி செய்கின்றனர். அத்தோடு திருச்சபையின் ஆசிரியத்துவமும் இதனை உறுதிப்படுத்துகின்றது.

## கன்னிமை என்னும் கொடைக்கு மரியா எவ்வாறு பதிலளித்தார்?

- கடவுளின் நிபந்தனையற்ற அழைத்தலுக்கு தம்முடைய சொந்த ஆசைகளை விடுத்து தம்மையே கையளித்தார்.
- மரியா தம்முடைய அழைத்தலால் மெசியாவை மனிதத் தன்மையில் வளர்ப்பதற்கும் அவருடைய பணியில் இணைந்து செயலாற்றுவதற்கும் தம் வாழ்க்கையை அர்ப்பணிக்க வேண்டும் என உணர்ந்தார்.
- இயேசு பிறப்பை பற்றி அறிவித்த பிறகு தாம் மனமுவந்து தேர்ந்தெடுத்த கன்னி - தாய்மை என்னும் விண்ணகக் கொடையை இறுதிவரை காப்பாற்றினார்.
- எனவே மரியா கடவுளுக்காக கன்னிமையைத் தழுவினார். ஆதலால் இறையாட்சிக்காக கன்னியாக இருந்தது முழுமை யான, ஆழமான அர்த்தத்தைப் பெற்றது (மத் 19:12).
- மரியா இயேசுவின் தாயாக தமக்கு கொடுக்கப்பட்ட பணியை, தியாகத்தையும் அல்லது துன்பத்தையும் எண்ணாது தம்மையே முழுமையாகக் கையளித்ததன் மூலம் நிறைவேற்றினார். மரியா பிரதிபலனாக எதனையும் எதிர்பார்க்கவில்லை. மேலும் கடவுளின் விருப்பத்தை அன்புடன் நிறைவேற்றினார். மரியாவின்

இயேசு பிறப்பை பற்றி அறிவித்த பிறகு தாம் மனமுவந்து தேர்ந் தெடுத்த கன்னி - தாய்மை என்னும் விண்ணகக் கொடையை இறுதிவரை காப்பாற்றினார்.

கன்னிமை உடலுறவை வெறுப்பதில் அல்ல மாறாக தம்மையே இத்தகைய பணிக்காக முழுமையாக அர்ப் பணித்ததில் அடங்கியுள்ளது. கடவுளுக்கு மட்டுமே தம்மை முழுவதும் கையளித்தார்.

மரியாளின் கன்னிமை உடலுறவை வெறுப்பதில் அல்ல மாறாக தம்மையே இத்தகைய பணிக்காக முழுமையாக அர்ப் பணித்ததில் அடங் கியுள்ளது.

மரியாவின் மன உறுதி அவரது ஆழமான இறை யனுபவத்தில் வேரூன்றியது. அதனால அவரிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை தாராளமாக முழுவதும் செய்தார். அவரின் கன்னிமை ஓர் இழப்பன்று. ஆனால் கடவுளின அன்பால் ஈர்க்கப்பட்டு கண்டுபிடித்தது. அவர் இயேசுவுக்காகவும், அவர் பணிக்காகவும் தம் வாழ்க்கை முழு வதையும் அர்ப்பணிக்கத் தயாராக இருந்தார்.

அவரின் கன்னிமை ஓர் இழப்பன்று. ஆனால்கடவுளின அன்பால் ஈர்க்கப்பட்டுகண்டுபிடித்தது. அவர் இயேசுவுக்காகவும், அவர் பணிக்காவும் தம் வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணிக்கத் தயாராக இருந்தார்.

## முடிவாக

விவிலிய அடிப்படையில் கன்னிமை இறை அருட்பெருக்கின் அடையாளமாகவும் மனித முழு அர்ப்பணத்தின் அடையாளமாகவும் அமைகின்றது. இந்நோக்கில் கன்னிமை இறைவனின் சிறப்பு அழைப்பு. உடைபடா உள்ளத்தோடு இறைவனுக்கு அர்ப்பணித்தலே திருச்சபையிடமிருந்து இயேசு எதிர்பார்க்கும் கன்னிமையாகும். இவ்வுலகை இறையரசோடு இணைக்கின்ற இறைபணிக்குத் திருச்சபை முழுவதும் தன்னையே உடைபடா உள்ளத்தோடும், சிதறா மனத்தோடும் வழங்க அழைக்கின்றது. என்றும் கன்னியான மரியன்னை திருச்சபை முழுவதையும் உடைபடா உள்ளத்தோடு பணிபுரியச்செய்ய பரிந் துரைப்பாளாக!

### உசாத்துணை நூல்கள்


(1). திருவிவிலியம்

(2). அம்மா எனும் அருளோவியம் - மதுரை ஆனந்த்

(3). இதோ பெண் - சகோ. ஜெசிந்தா FMA

(4). மரியியல் பாடக்குறிப்புகள், அருட்திரு. ப.யோ. ஜெபரெட்ணம், புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி, கொழும்புத்துறை.



## வாசகர் கடிதம்

இறையியல்கோல நிர்வாகிகளுக்கு,

தங்கள் இறையியல் இதழில் கிறிஸ்தவ வாழ்வில் நாம் கடைப் பிடிக்கவேண்டிய திருத்தங்களைப் பற்றி எல்லாம் வெளியிட்டிருக் கிறீர்கள். நான் 2005ன் பிற்பகுதியில் தான் இறையியல் கோலங்கள் வாசிக்கத் தொடங்கினேன். நான் அதிகம் படிக்கவில்லை என்றாலும் குருக்களோடும் மறையா சிரியர்களோடும் இணைந்து மறைக்கல்வி வகுப்புக்களில் பணியாற்றினேன். தங்கள் இதழில் உள்ள ஆக்கங்கள் பற்றிய எனது கருத்துக்களை எழுதுகிறேன்.

க.செபமாலை, சுப்பர் மடம் சுடலை, பருத்தித்துறை.

### மதிப்புள்ள வாசகருக்கு!

சுனாமி பேரழிவு, வழிபாடு, மன்னிப்பு ஆகியவைபற்றி வெளிவந்த கட்டுரைகள் பற்றிய தங்கள் விமர்சனங்களை வரவேற்கின்றோம் நன்றி. இறையியல் கோலங்களுக்கு தாங்கள் வெளிப்படுத்தும் ஆதரவுக்கு நன்றி. இடமிருப்பின் அடுத்த இதழில் தங்கள் விமர்சனங்களை பிரசுரிக்கின்றோம். தொடர்ந்து எழுதுங்கள்.

- ஆசிரியர் குழு -

# மரியாவின் அருள்நிறை அமல உற்பவம்

தே.ஆ.மெனோ பஸ்ரி ஜயந்த அ.ம.தி

இறைமகன் இயேசுவின் அன்னையும், எங்கள் தாயுமான அன்னை மரியா, கடவுளின் தாயாக, என்றுமே கன்னியாக, சென்மபாவமின்றி உற்பவித்தவராக, ஆன்மாவோடும் உடலோடும் விண்ணகத்திற்கு முழுமையாக எடுத்துக் கொள்ளப்பட்டவராக திருச்சபையினால் போற்றப்பட்டு வருகின்றார். இந்நான்கு உண்மைகளையும், விசுவாசக் கோட்பாடுகளாக திருச்சபை பிரகடனம் செய்துள்ளது.

## திருச்சபையில் கோட்பாடுகள்:-

நவீன இரண்டு மரியியல் கோட்பாடுகளில் முதலாவதாக உள்ளது மரியன்னையின் அமல உற்பவக் கோட்பாடாகும். இது இன்று, கத்தோலிக்கருக்கும் ஏனைய கிறிஸ்தவ சபையினருக்குமிடையே ஒரு தப்பான எண்ணத்தையும், விவாதத்தையும் உருவாக்க காரணமாய் அமைந்துள்ளது. ஏனெனில் ஏனைய கிறிஸ்தவ சபைகள் இக் கோட்பாட்டை விவிலிய அடிப்படை அற்றது என ஏற்க மறுக்கின்றனர்.

> இறைவனது வெளிப்பாடானது எந்த வித பாகுபாடுமின்றி, அனைத்துக் கடவுளின் பிள்ளைகளுக்கும் சொந்தமானது

பொதுவாக 18ஆம் நூற்றாண்டிலிருந்து, திருச்சபையினால் பிரகடனப்படுத்தப்படும் கோட்பாடுகள் யாவும், இறை வெளிப்பாடு என ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இறைவன் தனது வெளிப்பாட்டை படைப்பின் மூலமாகவும், மனித வரலாற்றில் அவர் ஆற்றும் உன்னத செயல்கள் மூலமாகவும் வெளிப்படுத்துகின்றார். உதாரணமாக, இணை 32:3 இல் மோசேயின் பாடல் மூலம் கடவுளின் உன்னத தன்மை, நீதி, அவரது பிரமாணிக்கம் என்பன எமக்கு வெளிப்படுத்தப்படுகின்றன. இறைவனது வெளிப்பாடானது

எந்த வித பாகுபாடுமின்றி, அனைத்துக் கடவுளின் பிள்ளைகளுக்கும் சொந்தமானது. ஆகையால்தான் கடவுளின் பிரசன்னமாக இவ்வுலகில் விளங்கும் திருச்சபையானது, இறைவனின் வெளிப்பாடுகளை ஒருங்கிணைத்து எமக்கு அவற்றை விசுவாசக்கோட்பாடாக தருகின்றது. ஆகவே, கிறிஸ்தவ கோட்பாடுகள் யாவும், இறைவன் தனது மகன் யேசுவின் மூலமும், அவரது பணிவாழ்வின் மூலமும், எமது மீட்பின் மூலமும் வெளிப்படுத்திய உண்மைகளேயாகும். இக்கோட்பாடுகளே இன்று எமது கிறிஸ்தவ வாழ்வை ஒருங்கிணைக்கும் சக்தியாகவும், அதை உறுதிப்படுத்தும் கொடையாகவும் இருந்து வருகின்றன.

இவ்வாறே மரியன்னையின் அமல உற்பவக் கோட்பாடு உலகலாவிய ரீதியில் பரந்து வாழும் விசுவாசிகளின் வெளிப்பாடுகளிலிருந்தும், அவர்களின் விசுவாச அறிக்கையிலிருந்தும், ஒருங்கிணைத்து தரப்பட்டுள்ளது.

## வேதாகமத்தில் தூய்மை / பரிசுத்த தனம் :-

கடவுள் ஒருவரே பரிசுத்தர், தூயவர். தூய்மை, பரிசுத்ததனம் என்பது கடவுளின் குணாம்சங்களில் ஒன்று என பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளது. எந்த ஒரு படைப்புப் பொருட்களும் கடவுளின் பரிசுத்த தனத்திற்கு ஒப்பாக மாட்டாது.

> **இயேசுக்கிறிஸ்து தனது மணவாட்டியான, திருச்சபைக்காக, அவளது தூய்மைக்காக தன்னையே முழுமையாக அவளுக்கு கொடுக்கின்றார். ஆகவே, இயேசுவால் தூய்மை பெறும் திருச்சபை, அதன் முன்மாதிரிகையாக விளங்கும் மரியாவின் தூய்மையை தெளிவாக காட்டுகிறது.**

இஸ்ராயேல் மக்கள், பரிசுத்த இனம் என அழைக்கப்படக் காரணம் அவர்களது நற்செயல்களின் பொருட்டன்று. மாறாக, அவர்கள் பரிசுத்த கடவுளினால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பரிசுத்த கடவுளின் பிரசன்னத்தை தங்கள்மத்தியில் கொண்டிருப்பதனாலேயாகும் (ஓசே 11:9). புதிய ஏற்பாட்டில இயேசுவைப் பின் பற்றியவர்கள், பரிசுத்த மக்கள் என அழைக்கப்படக் காரணம், அவர்கள் கடவுளால், அவரது தூய வாழ்வில் பங்குகொள்ள அழைக்கப்பட்டதாலேயாகும். தூய ஆவியோடு ஒன்றித்திருக்கும் இயேசுக்கிறிஸ்து தனது

மணவாட்டியான, திருச்சபைக்காக, அவளது தூய்மைக்காக தன்னையே முழுமையாக அவளுக்கு கொடுக்கின்றார். ஆகவே, இயேசுவால் தூய்மை பெறும் திருச்சபை, அதன் முன் மாதிரிகையாக விளங்கும் மரியாவின் தூய்மையை தெளிவாக காட்டுகிறது.

## மரியாவின் தூய்மை / மாசற்ற தன்மை:-

எல்லாவிதமான பரிசுத்தமும், கடவுளின் தெரிவிலே தங்கியுள்ளது. இன்று அனைவராலும் கொண்டாடப்படும் மரியன்னையின் அமல உற்பவம், அவளது பரிசுத்த தன்மை, மீட்பு திட்டத்தில் அவள் வகித்த முக்கியமான பங்கிலேயே முழுமையாக தங்கியுள்ளது. இயேசுவைப் பின்பற்றுபவர்கள் ஒவ்வொருவரும் கடவுளாலேயே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். "நாம் தூயோராகவும், மாசற்றோராகவும், தம் திருமுன் விளங்கும்படி, உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மை கிறிஸ்துவழியாய்த் தேர்ந்தெடுத்தோர்" (எபே 1:4). ஆனால் அழைக்கப்பட்டவர்கள் கடவுளால் ஆட்கொள்ளப்படுதலும், அவரது தூய்மையில் பங்கு பெறுவதும் அவரவர் பதிலிலேயே நிறைவு காண்கின்றது.

"கடவுள் மரியா மீது கொண்டிருந்த முழுமையான, உண்மையான அன்பினால், மரியாவை அவளது தாயின் கர்ப்பத்தில் உருவாகிய கணப் பொழுதிலிருந்து, அவளது வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் அருளினால் காத்து வந்தார்".

ஆனால் மரியா இறைவனின் மீட்புத்திட்டத்தில் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். உலகின் தொடக்கத திலேயே மரியா மீட்பரின் தாயாக கடவுளினால் மீட்புத்திட்டத்தில் குறித்து வைக்கப்பட்டாள். "கடவுள் மரியா மீது கொண்டிருந்த முழுமையான, உண்மையான அன்பினால், மரியாவை அவளது தாயின் கர்ப்பத்தில் உருவாகிய கணப் பொழுதிலிருந்து, அவளது வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் அருளினால் காத்து வந்தார்". மரியாவின் விசேட அழைப்பானது அவரை இவ்வுலக வாழ்வின் யதார்த்தத் திலிருந்தும், போராட்டங்களிலிருந்தும் முற்று முழுதாக வேறுபடுத்தி விடவில்லை. ஏனெனில், அவர் இவ்வுலகில் உண்மையான மானிடப்பிறவியாகவே வாழ்ந்தார். பரிசுத்தமானது மரியாவின் வாழ்வை சீரானதாகவோ, இலகுவானதாகவோ மாற்றி விடவில்லை. ஏனெனில் அவளது பரிசுத்த வாழ்வு, அவளது தனிப்பட்ட பொறுப்பிலும், சுதந்திரத்திலும் தங்கியிருக்கிறது. இதனால் அவர் இவ்வுலக வாழ்வின்

சோதனைகளிலிருந்து முற்று முழுதாக விடுபட்டிருக்கவில்லை. அவரது வாழ்வில் பல சவால்கள், விட்டுக்கொடுப்புக்கள், சந்தேகங்கள் நிறைந்திருந்தன. மேலும் இச்சவால்கள் அவரை கொல்கொத்தா எனும் முழுமையான இருட்டிற்கே அழைத்துச் சென்றது. அவரது நாளாந்த வாழ்வில் தனது மகனைப் பறிகொடுத்த துன்பத்தை அவரும் அனுபவித்தார். இவ்வாறு மரியன்னை எமது விசுவாச வாழ்வில் எமது அன்புச் சகோதரியாக நின்று வழிகாட்டுகின்றார். இங்கு குறிப்பிட்டுக் கூறப்படவேண்டியது என்னவெனில், ஏனையவர்கள் கடவுளின் அழைப்பை உதாசீனம் செய்திருந்தால் அது கடவுளின் மீட்புத்திட்டத்தை பாதிக்காது. ஆனால் மரியா தனது அழைப்பை வேண்டாம் என ஒதுக்கியிருந்தால் அது கடவுளின் மீட்புத்திட்டத்தை பாதித்திருக்கும் என்பதாகும்.

## விவிலிய அடிப்படை:

வுல்கத்தா என்ற மொழிபெயர்ப்பிலிருந்து ''உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்குமிடையே பகையை உண்டாக்குவோம் அவள் உன் தலையை நசுக்குவாள்'' (தொ.நூ 3:15) என்ற விவிலியப் பகுதி மரியாவின் அமல உற்பவக்கோட்பாட்டிற்கு ஓர் ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றது. தனது அமல உற்பவத்தின் மூலம் பாவத்தின் மீது மரியா கொண்ட வெற்றியை காட்ட, இறையியலில், இவ்விவிலியப் பகுதி பயன்படுத்தப்படுகின்றது.

> ''என் அன்பே... உன்னில் மாசு மறுவே கிடையாது''
> (உ.சங் 4:7)

மேலும் ''அருள் நிறைந்த மரியே வாழ்க'' (லூக் 1:28) என்ற வானதூதரின் வாழ்த்து நிறைந்த விவிலியப்பகுதியும், ''என் அன்பே... உன்னில் மாசு மறுவே கிடையாது'' (உ.சங் 4:7) என்ற விவிலியப் பகுதியும் மரியாவின் புனிதத்தன்மை இறைவனின் கொடையாகும் என்பதைக் காட்டுவதோடு, அவளின் ''அமல உற்வபம்'' என்ற விசுவாசக் கோட்பாட்டை உறுதிப்படுத்தும் ஆதாரங்களாகக் கருதப்படுகின்றன.

## பாரம்பரியத்தில் மரியாவின் தூய்மை:-

இறையியல் பாரம்பரியமானது கிறிஸ்தவ குழுமங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட இறை வெளிப்பாடுகளால் உருவாக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் கூற்றுப்படி, மக்களது பரிசுத்தமான வாழ்வும், விசுவாச உறுதியும், பாரம்பரியத்தின் சாராம்சமாக அமைந்துள்ளது. அதற்கிணங்க திருச்சபையானது, தனது விசுவாசக் கோட்பாடுகள், வழிபாடுகள் மூலம் மக்களது பரிசுத்தமான வாழ்விற்கு உரமூட்டுகின்றது.

ஆகவே, மரியியல் பாரம்பரியமும், திருச்சபையின் ஆழமான இறைவெளிப்பாட்டின் உண்மைகளையும், கருத்துக்களையும் எமக்கு தந்து நிற்கின்றது. கிறிஸ்தவ பாரம்பரியமானது, பரிசுத்த ஆவியின் வழிநடத்தலின் கீழ், திருச்சபையின் கற்பிக்கும் அதிகாரம் கொண்ட திருச்சபையின் ஆசிரியத்தினால் (Magisterium) துய்த்துணரப்பட்ட ஓர் உண்மையாகும்.

**மரியாவின் பரிசுத்த தனத்தைப் பற்றி இரண்டு விதமான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.**

1. மரியாவுக்கும், ஏவாளுக்குமிடையே காணப்படும் முரண்பாடு (இரேனியுஸ்):-

மரணத்திற்கு காரணமாய் அமைந்த ஏவாளுக்குப் பதிலாக, முட்கள் நடுவே மலர்ந்த மல்லிகையான, உடலிலும், ஆவியிலும் பரிசுத்தமான, தூய்மையும், அருளும் நிரம்பப் பெற்ற, கடவுளுக்கு மிகவும் உகந்த மணவாட்டியான மரியா எமக்குத் தரப் பட்டுள்ளார்.

**மரணத்திற்கு காரணமாய் அமைந்த ஏவாளுக்குப் பதிலாக, முட்கள் நடுவே மலர்ந்த மல்லிகையான, உடலிலும், ஆவியிலும் பரிசுத்தமான, தூய்மையும், அருளும் நிரம்பப்பெற்ற, கடவுளுக்கு மிகவும் உகந்த மணவாட்டியான மரியா எமக்குத் தரப்பட்டுள்ளாள்.**

2. மிகவும் அற்புதமான, விசித்திரமான முறையில் மரியா இயேசுவோடு இணைக்கப்பட்டுள்ளார்:-

தியாக்கோன் எப்ராயேம் (Ephraem) மற்றும் சிரியான் (Syrian) ஆகியோரின் சாட்சியப்படி "இயேசுவும், மரியாவும் முழுமையான அழகு நிரம்பப் பெற்றவர்களும், எதுவித பாவக் கறையோ, குற்றமோ அற்றவர்களாவர்"

புனித அகுஸ்தீனார்
சென்மபாவம்
உடலுறவு வழியாக
உலகிற்கு வருகின்றது
எனக் கூறுகின்றார்.
ஆனால் இயேசு தவிர
அனைவரும் ஆண்,
பெண் உடலுறவு
வழியாகப் பிறப்பதால்
அனைவரும்
சென்மபாவத்திற்கு
உட்படுகின்றனர் எனக்
கூறுகின்றார்.

மேற்குலக திருச்சபையின் சென்ம பாவம் பற்றிய இறையியல் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு மரியாவின் மாசற்ற தனத்திற்கு சவால்கள் எழுந்தன. புனித அகுஸ்தீனார் சென்மபாவம் உடலுறவு வழியாக உலகிற்கு வருகின்றது எனக் கூறுகின்றார். ஆனால் இயேசு தவிர அனைவரும் ஆண், பெண் உடலுறவு வழியாகப் பிறப்பதால் அனைவரும் சென்ம பாவத்திற்கு உட்படுகின்றனர் எனக் கூறுகின்றார். இதனடிப்படையில் புனித அக்குயின் தோமையாரும், புனித பெரிய ஆல்பட் மற்றும் புனித பொனவேந்தூர் போன்ற இறையியலாளர்கள் அமல உற்பவக் கோட்பாட்டை ஏற்க மறுத்தனர். ஆனால் பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த ஜோன் டன்ஸ் ஸ்கொட்டஸ் என்பவர் அவர்களுக்கு பின்வருமாறு பதில்கொடுத்தார். "உலகில் பிறந்த எல்லா மனிதரைப் போலவும், மரியாவுக்கும் இயேசுவின் மீட்புத் தேவைப்பட்டது. இருப்பினும், இயேசுவின் உறைவிடமாக மாற வேண்டியிருந்த மரியாவை இயேசு தனது மீட்பின் பலனை முன்னிட்டு சென்மபாவத்திலிருந்து பாதுகாத்தார்", என கூறுகின்றார். இக்கருத்தின் மூலம், அமல உற்பவக் கோட்பாட்டிற்கு இருந்த எதிர்ப்பு மறைய ஆரம்பித்தது.

11ஆம் நூற்றாண்டு தொடக்கம் 15ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் மரியாவின் அமலஉற்பவக் கோட்பாடு, கீழைத்தேய திருச்சபையில் ஏற்றக்கொள்ளப்பட்டதாக கிறகோறியஸ் ஸ்கொலாறிஸ் (Gregorius Scholaris) என்பவர் சான்று பகர்கின்றார்.

11ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே மார்கழி 8ஆம் திகதி மரியாவின் அமல உற்பவ திருநாள் மக்கள் பக்திமுயற்சியில் ஆரம்பமாகியது. மேலும் 1497ஆம் ஆண்டில் திருத்தந்தை நான்காம் சிக்ஸ்டஸ் (Sixtus IV) அவர்களால் அமலோற்பவத் திருப்பலிக்கான செபங்கள் தொகுத்துக் கொடுக்கப்பட்டன. திரித்தெந்தின் பொதுச் சங்கம் 1546 ஆம் ஆண்டு அமலோற்பவத்தை ஏற்றுக் கொண்டது. 1708 ஆம் ஆண்டு அமலோற்பவத் திருநாளானது கடன் திருநாளாக திருத்தந்தை

9ஆம் கிளமெண்ட்டால் உருவாக்கப்பட்டது.

பல மரியன்னையின் பக்திச் சபைகளினதும், தனியார் பலரினதும் வேண்டுகோளுக்கிணங்க 1854ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் 8ஆம் நாள், திருத்தந்தை 9 ஆம் பத்திநாதர் "Ineffabilis Deus" என்னும் மடலின் மூலம் மரியாவின் அமல உற்பவத்தை விசுவாசப் பிரகடனமாக வரையறுத்து அறிவித்தார். "எல்லாம் வல்ல இறைவன் தந்த தனி அருளாலும்,சிறப்புரிமையாலும், மனித குல மீட்பர் இயேசுவினது பேறுபலன்களை முன்னிட்டு, தூய கன்னி மரியா கருவான முதல் கணத்திலிருந்தே ஜென்மபாவத்தின் மாசு எதுவுமின்றிக் காப்பாற்றப் பெற்றார்", என்னும் கோட்பாடு இறைவனால் வெளிப்படுத்தப் பெற்றது எனவும், எனவே எல்லா விசுவாசிகளாலும் உறுதியாக எப்பொழுதும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவினதும், திருத் தூதரான புனித பேதுரு, பவுல் ஆகியோரது அதிகாரத்தாலும், நமது அதிகாரத்தாலும் எடுத்துரைத்து, அறிக்கையிட்டு, வரையறுத்துக் கூறுகிறோம். எனப் பிரகடனப்படுத்தினார்.

> "எல்லாம் வல்ல இறைவன் தந்த தனி அருளாலும், சிறப்புரிமையாலும், மனித குல மீட்பர் இயேசுவினதுபேறு பலன்களை முன்னிட்டு, தூய கன்னி மரியா கருவான முதல் கணத்திலிருந்தே ஜென்மபாவத்தின் மாசு எதுவுமின்றிக் காப்பாற்றப் பெற்றார்"

ஆனால் மரியாவின் இந்த அமல உற்பவக் கோட்பாட்டை பலர், விசேட விதமாக புரட்டஸ்தாந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களின் கருத்துப்படி, இயேசு ஒருவரைத் தவிர வேறு எவரும் பாவம் இன்றி பிறக்கவில்லை. ஆனால் மரியா சென்மபாவம் இன்றிப் பிறந்தார் என்று கூறும் போது, அது இயேசுவின் உன்னதமான தன்மையை மங்கச்செய்வதாக அமைகின்றது. என தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

மத்திய காலப் பகுதியிலிருந்து மரியன்னையின் கோட்பாடு கீழைத்தேய திருச்சபைகளில் போதிக்கப்பட்டு வந்தது. ஆனால் மேலைத்தேய திருச்சபைகளில் இக்கோட்பாடானது பலவாறு விவாதிக்கப்பட்டு வந்தது. இவர்களும் பின்பு புரட்டஸ்தாந்து மதத்தவர்களின் ஆதிக்கத்திற்கு ஆளாகினர். இதனால் அவர்களுக்கு மிகவும் கேள்விக் குறியாக அமைந்தது சென்மபாவம் பற்றிய ஒரு பிரச்சினையாகும். இதனால் தான் மரியாளின் அமல உற்பவக் கோட்பாடும்

இவர்களுக்கு விவாதிக்கப்பட வேண்டிய ஒரு விடயமாக அமைந்தது.

ஆனால் இன்று உலகளாவிய ரீதியில், திருச்சபை முழுவதும் பல துறவற சபைகள் "அமல உற்பவ அன்னை"யின் பெயர் கொண்டு பல்வேறுபட்ட அளப்பரிய சேவைகளை வழங்கி, திருச்சபையின் வளர்ச்சிக்கு உதவி வருகின்றன. உதாரணமாக, அமலமரித் தியாகிகள் சபை, அமல அன்னையின் போதக சபை போன்ற சிலவற்றை குறிப்பிடலாம். மரியன்னை உலகம் முழுவதற்கும் மாசற்ற தாயாக, அருள் நிறைந்த அன்னையாக அருள்பாலித்து வருகின்றாள்.

"வாழ்க மரியன்னை! வாழ்க அவளது அமல உற்பவம்"


உசாத்துணை நூல்கள்:
1. விவிலியம்
2. அம்மா எனும் அருளோவியம் - மதுரை ஆனந்
3. வகுப்ப குறிப்பு (Class Notes) - அருட்திரு.ஜெபரட்ணம், புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி




# மரியாவின் விண்ணேற்பு

அருட்சகோதரன் - றொ.றொபின்சன்

## முன்னுரை

*இறைபற்று என்பது இறைவனை நம்பும் மனித உள்ளத்தின் ஒரு உணர்வு நிலை. இவ்வுணர்வு நம்பிக்கையாக உருவெடுத்து, அந்நம்பிக்கை ஒரு குறிப்பிட்ட வழிபாடாக வெளிப்படுவது வரலாற்று உண்மை. எல்லா உணர்வுகளும், வெளிப்பாடுகளும் அர்த்தமுள்ளவையாய் மாறிவிடுவதில்லை. எனவே மக்களின் பக்தி உணர்வை நெறிப்படுத்தி வகைப்படுத்துவது அந்தந்த மதத்தலைவர்களின் தலையாய கடமை.*

## விசுவாசக் கோட்பாட்டின் உதயம்

இறைமக்களின் விசுவாச உணர்வுகளும் வரலாற்றில் பல வகைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வப்பொழுது திருச்சபையின் ஆசிரியம் (Magisterium), திருநூல் (Scripture), மரபு (Tradition), என்னும் உரைக்கறக்களில் உரசிப்பார்த்து, அவற்றின் பதிப்பையும், உயர்வையும் உலகுக்கு வெளிப்படுத்தும்.

அவ்வாறான விசுவாச உணர்வுகளில் ஒன்றான மரியா வணக்கம், எபேசு திருச்சங்கம் (கி.பி 431) தொட்டு திருச்சபையில் பல பகுதிகளிலும் பரவலாக கொண்டாடப்பட்டு வந்துள்ளது. மரியா வணக்கத்தைத் தொடர்ந்து மரியா பற்றிய கொள்கைக்ளும் பரவலாக எழ ஆரம்பித்தன. இவற்றில் நான்கினைச் சோதித்துப் பார்த்து அவற்றை விசுவாசக் கோட்பாடுகளாக திருச்சபை ஆசிரியம் அறிவித்துள்ளது. இவற்றுள் இறுதியானதும், இதுவரை திருச்சபை அறிவித்த கோட்பாடுகளில் இறுதியுமானதாக மரியாவின் விண்ணேற்பு திகழ்கின்றது.

## அன்னை பக்தியின் ஆரம்பம்

விசுவாசக் கோட்பாடுகள் எவையும் ஒரே நாளில் திடீரென அறிவிக்கப்படுபவை அல்ல. அவை இறைமக்களின் விசுவாசத்தில் முளைத்து, வளர்ந்து, செழித்த பின்பே விசுவாச உண்மைகளாக அறிவிக்கப்படுகிறன. மரியாவின் விண்ணேற்புப் பற்றிய கோட்பாடும் அவ்வகையில் எழுந்ததே. "மரியா இறைவனின் அன்னை" என்ற எபேசு திருச்சங்கத்தில் அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்ட விசுவாசப் பிரகடனம் பல்வகை மரியா வணக்கங்களும், பல திருவிழாக்களும் திருவழிபாட்டில் நுழையும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. கீழை, மேலைத் திருச்சபைகளில் மரியா விழாக்கள் பல தோன்றின. சுத்திகரதிருநாள், மங்கள வார்த்தை திருநாள், மரியாளின் பிறப்பு, மரியாவின் விண்ணேற்பு விழா ஆகியவை கீழைத் திருச்சபைகளில் தோன்றி, மேலைத் திருச்சபைகளிலும் பரவின. திருத்தந்தை செர்ஜியுஸ் (கி.பி 687-701)காலத்தில் திருச்சபை முழுவதும் கொண்டாடக் கூடிய பெருவிழாவாக மரியாவின் விண்ணேற்பு விழா மாறியது. திருத்தந்தை முதலாம் நிக்கோலாஸ் (கி.பி 858-867) காலத்தில் மறைய முடியாத அளவிற்குத் திருவழிபாட்டில் ஊன்றிய வெற்றி விழாவாக விண்ணேற்பு விழா மாறியது.

## கோட்பாட்டுப் பிரகடனம்.

மரியாவின் விண்ணேற்பு பற்றிய நம்பிக்கையை விசுவாசக் கோட்பாடாக பிரகடனப்படுத்தியவர் திருத்தந்தை 12ஆம் பத்திநாதர். இவர் தமது விருப்பம் போல் விசுவாசக் கோட்பாடுகளைக் கையாண்டவர் என்று குற்றம் சாட்டப்பட்டவர். இது உண்மையன்று. மரியாவின் விண்ணேற்புப் பற்றிய விசுவாசக் கோட்பாட்டை பிரகடனப்படுத்தும்முன் ஞானத்தோடும் விவேகத்தோடும் நடந்து கொண்டார். இவர் அதனை பிரகடனப்படுத்தும் முன் ஓராயிரம் ஆண்டுகளாக அவ்விழா எல்லோராலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்தது. திருத்தந்தை 9ஆம் பத்திநாதர் காலத்திலே இவ்வுண்மை விசுவாசக் கோட்பாடாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கை பல தரப்புகளிலும் எழுப்பப்பட்டது. திருத்தந்தை 12ஆம் பத்திநாதரிடமும் பல மனுக்கள் இதே கோரிக்கையைச் சுமந்து சென்றன. எனவே தனி மடல் ஒன்றை எல்லா ஆயர்களுக்கும், இறையியலாளர்களுக்கும் அனுப்பி இவ்வுண்மையில் எல்லோருக்கும் நம்பிக்கை உண்டா, இதனை விசுவாசக் கோட்பாடாக அறிவிக்க வேண்டி தேவை உண்டா? என்று விசாரணை செய்தார்.

விசாரணையில் 1196 ஆயர்களில் 1191 ஆயர்கள் சாதகமான பதிலை அளித்தனர். இதனைத் தொடர்ந்து திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் 1950 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1ஆம் நாள் அனைத்து புனிதர்களின் திருவிழா அன்று, புனித இராயப்பர் பேராலய ஆசனத்திலமர்ந்து ஆயிரக்கணக்காக இறைமக்கள் மத்தியில் இதனை விசுவாசக் கோட்பாடாக பிரகடனப்படுத்தினார்.




“இறைவனின் அன்னை யான அமல உற்பவ கன்னி மரியா தனது உடலோடும் ஆன்மாவோடும் வானக மகிமைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் என்பதை திருச்சபையின் விசுவாசக் கோட்பாடாக அறிவித்து பிரகடனப் படுத்தி வரையறுக் கின்றேன்” (Pope Pius XII in *Munificenttissimus Deus* 1950). இம்மறை உண்மையை விளக்கி, ஆதாரங்கள் காட்டி, கோட்பாட்டை வரையறுத்து அறிக்கை முற்றுப்பெறுகிறது.




மரியாவின் விண்ணேற்புப் பற்றிய விசுவாசக் கோட்பாடானது. அவரது அமல உற்ப விசுவாசக் கோட்பாட்டோடு பெரிதும் தொடர்பு டையது. மரியாவின் வாழ்வு மாசு அணுகாத கறைபடாத வாழ்வாக அமைந்து அவா மைந்தன் இயேசு வின் மீட்புப் பணியில் முதல் சீடராக பங்கு பெற்றதால் அவரின் மகிமை யில் முதல் நபராக இவரும் பங்கு பெறுகிறாள்.

# மரியாவுக்கு மரணமா?

"மரியா ஒருபோதும் மரியார்" என்று மரியாவின் பக்தர்கள் பலர் பெருமைப்பட்டுக் கொள்வதை நாம் அறிவோம். இதனை நாம் சிறப்புப் பொருளில் ஏற்றுக் கொள்ளலாம். சாதாரண பொருளில் இது அப்படியே உண்மையாயிருக்க வேண்டிய அவசியமில்லை. மரியாவின் மரணத்தைப் பற்றிய ஒத்த கருத்து எப்பொழுதாவது நிலவியதாகத் தெரியவில்லை. மரியா இறந்து அடக்கம் செய்யப்பட்டார் என்ற ஒரு பொதுவான மரபு இதுவரை இருந்து வருகிறது. 12ஆம் நூற்றாண்டில் வரையப்பட்ட 'மரியாவின் மரணம்' பற்றிய ஓவியங்கள் இன்றும் உள்ளன.

பாவத்தின் விளைவு தான் மரணம். அப்படியென்றால் பாவமறியாத மரியாவை மரணம் எப்படித் தீண்ட முடியும்? எனவே மரணத்தின் பிடியில் சிக்காமல் மரியா விண்ணகம் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற நம்பிக்கை வேரூன்ற ஆரம்பித்தது.

மரியா மரிக்கவில்லை. உடலோடும், ஆன்மாவோடும் விண்ணகம் எடுத்துக் கொளள்ளப் பட்டார் என்ற ஒரு மரபும் பசுமையாக இருந்து வருகிறது. இதற்கு ஒரு இறையியல் அடிப் படையும் உண்டு. பாவத்தின் விளைவு தான் மரணம். அப்படியென்றால் பாவமறியாத மரியாவை மரணம் எப்படித் தீண்ட முடியும்? எனவே மரணத்தின் பிடியில் சிக்காமல் மரியா விண்ணகம் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற நம்பிக்கை வேரூன்ற ஆரம்பித்தது.

திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் தனது சாசனத்தில் மரியாவின் மரணம் பற்றி திட்டவட்டமாக எதுவும் கூறாமல் விட்டுவிடுகிறார். "தனது வையக. வாழ்வு நிறை வெய்தியவுடன்....................." என்று மட்டும் குறிப்பிடுகிறார். எவ்வாறு நிறைவெய்தியது என்று அவர் குறிப்பிட வில்லை. மரியாவின் வையக வாழ்வு இறப்போடு நிறைவெய்தியதா? என்பதுவே நமது கேள்வி.

தம் மகன் தைரியத்தோடு சந்தித்த மரணத்திற்கு ஏன் மரியா தப்ப வேண்டும்?

மரியா மரிக்கவில்லை என்பதுவே அவருக்கு மகிமைசேர்க்கும்

என்று பலர் எண்ணுவது அவ்வளவு சரியல்ல. தம் மகன் தைரியத்தோடு சந்தித்த மரணத்திற்கு ஏன் மரியா தப்ப வேண்டும்?.

மரணத்தால் வாழ்வு மாறுபடுவதேயன்றி, அழிக்கப்படுவதில்லை என்றே அடக்கச் சடங்கு திருநூல் பகர்கிறது. பழைய ஆதாம் மரணத்தை வீழ்ச்சியின் வழிகாலாய் ஆக்கிட, புதிய ஆதாம், இயேசு மரணத்தை நித்திய வாழ்வின் வாய்க்காலாக மாற்றியுள்ளார். பின்னர் ஏன் மரியா மரணத்திற்கு தப்ப வேண்டும்?

புனித பவுல் அடியார் உயிர்ப்பு நிலையில் தமது உடல் மாற்றுரு பெறும் என்றே அடித்துக் கூறுகின்றார். (1கொரி 15:35,36)

மேலும் வானுலகம் ஒரு இடமல்ல, அது ஒரு நிலை. அங்கே இதே உடல் வாழ்வது எப்படி? இப்பின்னணியில் உற்று நோக்கும் பொழுது மரியாவும் மரணத்தை எதிர்கொண்டு வேற்றுருப் பெற்று விண்ணகம் சென்றார் என்று கொள்வது மிகவும் பொருந்தும். மரியா இயேசுவின் முதல் சீடர்; முழுமையான சீடர். இயேசுவின் மற்ற சீடர்கள் பெறப்போகும் அருள் நிலையை முதலில் பெறும் பாக்கியம் பெற்றவர். இயேசுவின் பாடுகள், இறப்பு, உயிர்ப்பு என்றும் மீட்பு மறைபொருளாய் இறப்பு ஒரு தண்டனை என்ற நிலை மாறி, அருள் வாய்க்காலின் ஒரு நிலை என்ற தன்மையை அடைந்துள்ளது. மீட்கப்பட்ட சமுகத்தில் முதல் பிறவி மரியா என்ற நிலையில் இந்த சமுகத்தின் வழிமுறையே அவருக்கும் பொருந்தும். சீடர் சமுகத்திலிருந்து மரியாவை பிரித்தெடுத்து ஒரு அசாதாரணப் பெண்மணியாக, ஒரு தேவதையாகக் காட்டும் போது, அவர் வரலாற்றுப் பெண், வரலாற்று நியதிகளுக்கு உட்பட்டவர், மனித குல நெறிமுறைகளை முழுமையாக கடைப்பிடித்து வாழ்ந்து சிறந்தவர் என்று காட்டும் அணுகுமுறையிலிருந்து தவறி விடுகிறோம்.

> சீடர் சமுகத்திலிருந்து மரியாவை பிரித்தெடுத்து ஒரு அசாதாரணப் பெண்மணியாக, ஒரு தேவதையாகக் காட்டும் போது, அவள் வரலாற்றுப் பெண், வரலாற்று நியதிகளுக்கு உட்பட்டவள் மனித குல நெறிமுறைகளை முழுமையாக கடைப்பிடித்து வாழ்ந்து சிறந்தவர் என்று காட்டும் அணுகுமுறையிலிருந்து தவறி விடுகிறோம்.

## விண்ணேற்பு விளம்புவது என்ன?

01. “தனது திரு உள்ளத்தை முழுமையாக நிறைவேற்றிய மகனை தந்தை உயர்த்தினார் (பிலிப் 2:6-9). உயர்ந்த இலட்சியங்கள் அழிவதில்லை என்ற இலக்கணத்தின் பசுமையான இலக்கியம் இயேசுவின் உயிர்ப்பு. இந்த உயிர்ப்பு இயேசுவைப் பின்பற்றும் அவரது சீடர் அனைவருக்கும் உண்டு. மரியா இயேசுவின் முதல், முழுமையான சீடர். இயேசுவை தனது உள்ளத்தில் ஏற்று, உதிரத்தில் தாங்கி, அவருடைய உணர்வுகளோடு ஒன்றாகி மீட்புத் திட்டத்தில் முதன்மையான பங்கு பெறுவது தகுதியும், நீதியுமாகும். அவள் நாம் அனைவரும் பெறப் போகும் விண்ணக மகிமையின் முன்னோக்கமாகவும், முன்னடையாளமாகவும், வெளிப்படையான நம்பிக்கையுமாக திகழ்கின்றார். நம்பிக்கை என்பது இன்றைய உலகில் கொஞ்சம் கொஞ்சமாக செத்துக் கொண்டிருக்கின்றது. அவ நம்பிக்கைகளும், அபாயங்களுமே மனிதனை சூழ்ந்து நிற்கின்றன. இருப்பினும் மரியாவின் விண்ணேற்பு நல்லதொரு நம்பிக்கையின் சின்னமாய் இருக்கிறது. இயேசுவின் வழியில் நடந்த மரியா போன்று மீட்புப் பாதையில் நடந்து இறந்தோம் என்றால் உறுதியாக வாழ்வோம் என்று சுட்டிக் காட்டுகிறது மரியாவின் விண்ணேற்பு.

இயேசுவின் வழியில் நடந்த
மரியா போன்று மீட்புப்
பாதையில் நடந்து
இறந்தோம் என்றால்
உறுதியாக வாழ்வோம்
என்று சுட்டிக் காட்டுகிறது
மரியாவின் விண்ணேற்பு.

02. மரியாவின் விண்ணேற்பு, இறைவன் மரியாவிற்கு மட்டும் தனிப்பட்ட முறையில் வழங்கிய சலுகை, கொடை என எண்ணுவது தவறு. இயேசுவை உயிர்ப்பித்த இறைவன், மரியாவையும் உயர்த்தினார். அதே போன்றும் விசுவாச வாழ்வில் பங்குபெறும் அனைவருக்கும். இப்பரிசு உண்டு.

03. இயேசுவின் இரண்டாம் வருகை (Parusia) அல்லது நிறை நிலையியல் (Eschatology) என்பது தனிநபரின் இறுதி நிலை அல்ல, மாறாக அது இன்றே தொடங்கிவரும் சமூகக் கூறுகளோடு

உள்ளடக்கிய புதிய படைப்பை குறித்து நிற்கிறது (உரோ 8:21) என்பதையும் மரியாவின் விண்ணேற்பு குறித்து நிற்கிறது.

04. இவ்வுலகை மாற்றவும், மேம்படுத்தவும் எடுக்கப்படும் முயற்சிகளுக்கு மரியாவின் விண்ணேற்பு ஆதரவுக்கரம் நீட்டுகிறது.

05. மரியாவின் "உடல்", "ஆன்மீக" விண்ணேற்றம் மனித உடலின், பருப்பொருளின் நன்மைத்தனத்தை சுட்டிக்காட்டி முழு மனிதமும் மீட்கப்படுவான் எனப் பகிர்கிறது. மனிதன் உடல், உள்ளம், ஆன்மா ஆகிய முக்கூறுகள் இணைந்த பிரிக்க முடியாத அறிவு ஜீவி, இவை அனைத்தும் உள்ளடக்கி மனிதன் முழுமையாக மீட்படையலாம் என்பதையும் மரியாவின் விண்ணேற்பு தெளிவு படுகின்றது. மனித ஆளுமையை மரணம் சிதைக்க முடியாது. இவ்வுலக வாழ்வின் நிறைவே மறுவுலகவாழ்வு. மரியா முழு ஆளாக (Enfleshed Reality) விண்ணகம் எடுத்துக் கொள்ளப்பட்டது போல மனிதனின் முழு ஆளுமையும் மறுவாழ்வு பெறும். அழியும் உடலை நாம் எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்தலாம் என்பதை பொய்யாக்கி, எம் முழு ஆளுமையும் வளர்க்கும் செயற்பாடுகளில் நாம் ஈடுபட வேண்டும்.

06. மரியாவின் விண்ணேற்பு பெண் குலத்தின் உயர்விற்கு ஒரு சவாலாக நிற்கிறது. பெண்விடுதலை பற்றி அதிகம் பேசப்பட்டாலும் அது கானல் நீராகவே உள்ளது. விண்ணக அரசி மரியாவை பெண்கள் மனக் கண்முன் கொண்டு அடிமை நிலையை மறுத்து உரிமை வாழ்வு வாழ முடியும்.

## முடிவுரை

இவ்வாறு திருச்சபையின் விசுவாசக் கோட்பாடுகள் அந்தந்த காலத்திற்கு ஏற்ற புதிய அர்த்தங்களைத் தர வேண்டும். அவை அனைத்தும் மாறிவரும் சூழ்நிலையிலும் எழும் கேள்விகளுக்கு தக்க பதில் தரவேண்டும். வாழ்வை பகலில் தொலைத்துவிட்டு, இரவில் அதனைத் தேடும் இன்றைய மனிதனுக்கு, மருந்துகள் என நம்பி நோய்களையே நுகரும் மனிதனுக்கு, இவ்வுலகில் ஞானத்துடன் ஈடுபட்டுழைத்து மரியாவைப் போன்று மாட்சிமை பெற்றிட அவரின் விண்ணேற்பு நம் எல்லோரையும் அழைக்கின்றது.

-நன்றி-

# இவ்விதழின் இறையியலாளர்

## தூய நசியான்சுஸ் கிரகோரியார் (கி.பி. 330 - 389)

**அருட்சகோதரன் ஜெகன்குமார் கூஞ்ஞ (அ.ம.தி)**

நம் ஆண்டவர், அன்னையாம் திருச்சபையையும் அவளது பாரம்பரிய மறையுண்மைகளையும் பாதுகாத்து மாசுபடாதவாறு வழிநடத்த காலத்துக்குக் காலம் சில மனிதர்களைத் தெரிந்தெடுத்து அவர்களை ஆவியினால் அர்ச்சித்து அனுப்புகின்றார். அம் மனிதர்களில் கப்பதோக்கியன் தந்தையர்களில் ஒருவரான தூய நசியான்சுஸ் கிரகோரியாரும் அடங்குவார். அனைத்து மறையுண்மைகளுக்கும் தாயாக விளங்கும் "திரித்துவ மறையுண்மை" ஏரியர்கள் என்னும் பேதகக்காரர்களினால் திரிவுபடுத்தப்பட்டு மாபெரும் அபாயம் ஏற்பட்ட வேளையில் ஆவியால் தூண்டப் பெற்று திரித்துவ மறையுண்மையை தெளிவாக எடுத்துரைத்து தப்பறையான பேதகங்களிலிருந்து காத்த மூன்று தூய மனிதர்களின் இவரது பங்கும் மிகக் காத்திரமானது.

## வரலாறு

கப்பதோக்கியன் தந்தையர்களின் ஒருவரான இவர் கி.பி 330ல் ஆயர் கிரகோரியாருக்கு மகனாய்ப்பிறந்தார். ஆரம்பக்கல்வியை தனது குடும்பத்திலே பெற்ற பின்னர் செசாரியா நகருக்குச் சென்று உயர்படிப்பை மேற்கொண்டார். நல்ல சந்திப்புக்கள் நல்ல உறவுகளை உண்டு பண்ணும் என்பதற்கொப்ப உற்ற நண்பன் பெரிய பசிலுடனான சந்திப்பு இவரது வாழ்வில் பெரும் திருப்பு முனையாக அமைகின்றது. பின்னர் நீசா

கிரகோரியாருடன் இணைந்து இம் மூவரும் திருச்சபைக்கு அளப்பரிய சேவைகளை ஆற்றினார்கள்.

பசிலுடன் இணைந்து நசியான்சுஸ் கிரகோரியார் அக்காலத்தில் உயர் கல்வியில் சிறந்து விளங்கிய ஏதென்ஸ் சென்றார். 358ஆம் ஆண்டு படிப்பை முடித்துவிட்டு வீடு திரும்பினார்; அங்கு தந்தையின் அலுவல்களில் உறுதுணையாக செயற்பட்டார். நண்பன் பசிலுடைய சந்திப்பு இவரது வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை அவரது தீர்மானங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஏனென்றால் இவரும் பசிலைப் போல மடத்துறவு வாழ்வு வாழ விரும்பினார். ஆனால் 362ல் (கி.பி) இவரது விருப்பத்திற்கு மாறாக திருச்சபையின் நலனுக்காக குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். 372ல் (கி.பி) பசிலின் தூண்டுதலின் காரணமாக "ஸ்சிமா" ஆயராக அபிசேகம் செய்யப்பட்டார். 374ஆம் ஆண்டு தந்தையின் மரணத்தின் பின்னர் "செலுசியாவில்" தனது விருப்பத்திற்கேற்ப துறவு சபையில் இணைந்து கொண்டார்.

"நிசேயா" விசுவாச அறிக்கையை மக்களிடம் உறுதிப்படுத்தும் முகமாக தன் துறவற நிலையை விட்டு கொன்ஸ்தாந்திநோபிளுக்கு செல்ல பணிக்கப்பட்டார். இவ்வாறு 'ஏரிய' கொள்கைக்காரர்களுக்கு எதிராக திருச்சபையின் இடிதாங்கியாக விளங்கினார். கொண்ஸ்தாந்தி நோபிள் சங்கத்திலே அவ்விடத்தின் ஆயராக நியமிக்கப்பட்டார். இவரது நியமனம் அனைவரையும் திருப்திப்படுத்தாததினால் அப்பதவியைத் துறந்து தம் சொந்த மண்ணுக்குத் திரும்பி, துறவு வாழ்வை மேற்கொண்டார். பல விதமான இறையியல் கருத்துக்களை மக்களுக்கு விளக்கி அவற்றை திருச்சபைக்கு எழுத்தில் கொடுத்தார்.

## இறையியல் எழுத்தாக்கம்

**(அ). இறையியலாளராக:-** ஐந்து முக்கிய இறையியல் போதனைகளைத் தந்துள்ளார். அடிப்படையில் இவ் ஐந்து போதனைகளும் 'ஏரிய' பேதக்காரர்களுக்கு எதிராக அமைந்துள்ளன. (ஏரியர்:- இறைதன்மையின் மகன் தந்தையின் நிலையில் இருந்து சற்றுத் தாழ்ந்த நிலையில் உள்ளவர் என்று கூறினர்.)

இவருடைய திரித்துவ விதியின்படி இறைவனாகிய தந்தை தொடக்கமற்றவர் என்றும் இறைவனாகிய மகன் ஜெனித்தவர் ஆனால்

தொட்டக்கமற்றவர் என்றும் தூய ஆவியானவர் உண்டாகிறவர் ஜெனித்தவர் அல்ல என்றும் சில உண்மைகளைக் கூறி அதை தெளிவுபடுத்தினார்.

கிறிஸ்து ஆண்டவர் தன் உயர்நிலையிலிருந்து தாழ்நிலைக்கு வந்த ஒரே மகன் என்றும் அவர் இரண்டு மகன் அல்ல, ஆனால் அவரிடம் இரண்டு சாயல்கள் உள்ளன என்றும் கூறினார். இவ்வாறு இவருடைய இவ் ஒப்பற்ற பணிகள் பின்னர் 'எபேசிய' சங்கத்திலும் 'கல்தேசிய' சங்கத்திலும் பெரிய துணையாக அமைந்தது.

**(ஆ). மனிதவியலாளராகவும் கவிஞராகவும்:-** 45 சொல்வன்மையுள்ள மறைசார் போதனைகளைத் தந்துள்ளார். இவை அனைத்தும் அன்றைய மொழியில் கல்விக்கூடங்களிலே பயன்படுத்தப்பட்டன. அனேகமானவை வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. மேற்கூறப்பட்ட மறைசார் போதனைகளும் பலவிதமான திருச்சபையின் தேவைகளுக்காக எழுதப்பட்டன.

**(இ). கவிஞராக:-** ஓர் கிறிஸ்தவ கவித்துறையை பொதுக்கல்வித் துறையில் இருந்து உருவாக்க உழைத்தார். இவருடையகவிதைகளும் பல வகையான நோக்கங்களைக் கொண்டன. உ+ம்:- மறையுண்மைக் கவிதைகள், ஒழுக்கவியல் கவிதைகள். சாதாரண பொதுநிலையினரின் பாவனைக்காக பல திருமுகங்களையும் எழுதியுள்ளார்.

## இறையியல் கொள்கைகள்

இவருடைய இறையியல் கொள்கைகள் மற்றைய இரண்டு கப்பதோக்கிய தந்தையர்களின் கொள்கைகளை ஒத்தே காணப் படுகின்றது. திருநூலையும், திருச்சபை பாரம்பரியத்தையும் அடிப்படை யாகக் கொண்டே இவரது எழுத்தாக்கங்கள் உருப்பெற்றுள்ளன. "மெய்யியலை" பேதங்களுக்கு காரணமாக கருதினார். தூய பசிலி யாரைப் போலல்லாது, திருச்சபையில் மெய்யியலின் வரவை "எகிப்திய வகைகள்" எனக் கருதினார். திருமறை நூல்களை விளக்க அலெஸ் சாந்திரிய மரபின் 'உருவக அணி' (allegorism) முறையை பயன் படுத்தினார்.

**(அ). தூய திருத்துவம்:-** இறைத்தன்மையையும், மூன்று ஆட்களையும் வேறு வேறாக தெளிவாக விளக்கியுள்ளார். திரித்துவ மறையுண்மைக்கு ஓர் நிலையான வலைவிலக்கணம் கொடுக்க அயராத உழைத்தார். இறுதியாக கப்பதோக்கியன் தந்தையர்களுடன் இணைந்து தனது முயற்சியில் வெற்றிகண்டார். அதன்படி ''ஒரே இறைதன்மை ஆனால் மூன்று ஆட்கள்'' - 'Mai onsia ters hypostasis' என்று விளக்கினார்.

மூன்று ஆட்கள்:-(1). தந்தை தன்மை - Patrotes

(2). மகன் நிலை - hyiotes

(3). அபிசேகம் செய்யும் தன்மை - hagiasmos

**(ஆ). கிறிஸ்து ஆண்டவர்:-** இவருடைய கொள்கையும் மற்றைய இருவரைப் போலவே ''அப்போலினாரியருக்கு'' எதிராகவே அமைந்தது. இவர்களின் போதனைக் கருத்துக்கள் ''இயேசுவின் மனிதத்தன்மையை'' மறுப்பதை கண்டு அப்போலினாரியருக்கு எதிராக தனது இறையியல் வாதத்தை முன்வைத்தார். ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து இரண்டு சாயல் களைக் கொண்ட ஒரே ஆள் என்று வாதிட்டு திருச்சபையின் விசுவா சத்தை நிலைநிறுத்தினார். அன்னை மரியாவை இறைவனின் தாய் (Theotokos) என எடுத்துரைத்தார்.

**(இ). அருள் நிலையும், திருவருட் சாதனங்களும்:-** பாவத்தின் பிடிக்குள் அகப்படும் முன்னர் மனிதர் இறவாத்தன்மையையும் உன்னத நிலையையும் அனுபவித்தனர் என்றும், மனிதன் இறை சாயலாகவும், பாவனையாகவும் படைக்கப்பட்டுள்ளான் என்றும் விளக்கினார்.

''சென்மபாவம்'' என்ற பதம் மட்டில் தூய பசிலியாரும் கிரகோரியாரும் வெவ்வேறான கருத்துக்களை கொண்டுள்ளார்கள்.

தூய பசில் சென்ம பாவத்தை அனைத்துப் பாவங்களின் ''மூலகாரணமா வர்ணிக்கின்றார்''. ஆனால் தூய கிரகோரியாரோ சென்மபாவமே ''முதலாவது பாவம்'' என வர்ணிக்கிறார். பாவப் பரிகாரத்தினை ''கண்ணீர் திருமுழுக்கு'' எனவும் இறைவனின் ''அருள்'' (actual grace) மனிதரின் நற்செயலில் தொடக்கத்திலும் முடிவிலும் உள்ளதாக கூறுகிறார்.

ஆச்சிரம வாழ்வையே உன்னத வாழ்வு நிலையாக தனது வாழ்வு மூலம் காட்டுகிறார். இறைப் பிரசன்னத்தோடு வாழப்படும் வாழ்வே

முழுமையும் அர்த்தத்தையும் கொடுக்கும் என்று தமது அநுபவம் மூலமாக காட்டுகின்றார்.

நவீன தொழில்நுட்ப யுகத்திலே வாழுகின்ற எமக்கு இவரது வாழ்வும், பணியும், இறையியல் கருத்துக்களும் ஓர் உண்மையைச் சுட்டிக் காட்டுகின்றது. அதாவது இறைவனின் அனைத்து நன்மைத் தனங்களையும் அவரது நிபந்தனையில்லா பராமரிப்பையும் அனுபவித்து நாம் இறைவனைவிட தூரத்தே உள்ளோம் என்பதாகும். தூய நசியான் சுஸ் கிறகோரியார் ஆண்டவர் இயேசுவின் மேல் வைத்திருந்த ஒப்பற்ற அன்பையும், திருச்சபையின் மேல் உள்ள மதிப்பும், இவரது அனைத்து வேலைகளுக்கும் காரணமாக அமைந்தது. கிறிஸ்தவராகிய எமது இன்றைய பங்களிப்பு இயேசுவின் மட்டிலும் அவரது திருச்சபை மட்டிலும் என்னவென்று இவரின் வாழ்க்கை சரித்திரம் பல கேள்விகளை எழுப்புகின்றது.

Bibiliography

1. Manual of Patrology, Cayre . F.AVG. I, Desclie & com, Roma, 1936

2. The New International Dictionary of Christian Church, ed., Douglas. J.P. Michigan, Paternoster Press, 1978.



# Synopsis

## Mary in Sacred Scripture

Bro.S.Newtan

In the Old Testament, according to the book of Genesis (3:15). the name 'Woman' was expressed in a special way. This 'Woman' would have been there at the time of creation or at least in the mind of God, specially in the heart of the Trinity. Then Isaiah 7:14, says this woman is not a symbol but it is 'Mary' the pregnant young woman.

Furthermore this idea of woman was inspired in the book of Micah 5:2-3. Also Jeremiah 31:22 says about this woman. So all these Scripture quotations mention and fortell about Mary.

In the New Testament, we could see that the evengelists have given more important facts on Jesus than Mary. Their total concern was only for Jesus because of the salvation which was brought by him. But in this history of salvation Mary's participation was very much important. St. Mark apparently expresses Jesus as son of Mary. He strongly points out Mary's virginity. In the gospel of Matthew Chapter 1,2 there are a lot of opinions regarding Mary. Verse 16 says that Mary gave birth to Jesus. Thus she is Mother of God. According to St.Luke's Jesus infant narratives these are beautifully mentioned. Here Mary is vividly expressed. St.John, in his gospel expresses Mary in a more theological manner.
Finally the last book of Scripture that is the book of Revelation explains that Mary is the 'Mother of the Redeemer'. She lives as a Queen and Mother in the hearts of all her faithful.

# Mary's Divine Motherhood

...... Rev, Bro. A.Rajanikanth ......

The most important truth about our Lady is that she is the Mother of God. The doctrine is supported by Sacred Scripture, Sacred Tradition and the Teaching Authority of the Church. The doctrine that "Mary is the Mother of God" is the base for her Assumption and Virginity.

Mariology is based upon the intimate bond that links Mary with Jesus. Our Christian faith tells us that Jesus who was born of the Virgin Mary is truly God and Man. Therefore Mary as the Mother gave Jesus his earthy life; and thus she becomes the Mother of God. But this doctrine of truth that "Mary as the Mother of God" was denied by Nestorius the Bishop of Constantinople. He stated that Jesus is only a man and not God; therefore Mary gave birth only to Jesus, the man, and she can be called as the mother of Jesus (Christotokos) and not God (Theotokos) But his idea was rejected by St.Cyril of Alexandria in the Council of Ephesus in 431. There the Council affirmed that Jesus is truly God and truly man; "one person in two natures" and Mary gave birth to the second nature. There fore she can be Called Theotokos, that means the Mother of God (Theo-God, Tokos-one who gives birth-Mother). This truth was further affirmed by the Councils of 2nd Constantinople (553AD) and Chalcedon (451 AD)

The Holy Scripture also speaks of Mary's Divine Mother hood; especially in the New Testament, the evangelists picture Mary as truly and undoubtedly the Mother of God by indicating Jesus as the son of Mary. (Mt 2:18, 2:11, 12:46, 13:55, Mk 3:31,Lk 2:34,48,51 8:19; Jh 2:5,19; Mk 6:3)

On these bases Mary also becomes the Mother of the whole humanity for she gave birth to the one who is the head of the whole body of humanity; that is Jesus.

# The Virginity of Mary

Bro. F.Eustace

Motherhood and virginity are inseparable in Mary. Mary's Motherhood is not only considered as her personal vocation, but also as the pattern of human involvement in the mystery of salvation. So we place Mary's virginity in the wider context of the communion of God with his creatures. In Mary's virginity we contemplate the creature's openness to God's word and grace, our total dependence on him and the fullness of response. So Mary becomes the model of the Church.

In many cultures virginity has a religious significance. It is not merely a physical condition of young men or women who have not yet had sexual relations, but expresses a purity which makes them more suitable for special religious functions. It implies self-control which is vital for spiritual growth. The religious conceptions of the Mediterranean world are important as the background for the Christian meaning of virginity.

Virginity has no place in the old Testament. Sterility meant humiliation and shame. Thus the meaning of virginity in the old Testaments is entirely different from that of the surrounding world. The meaning of virginity in the New Testament must be seen in this biblical context. It has nothing to do with ascetical continence or a negative attitude towards the body and sexual relations.

During the 4th and 5th centuries the mystery of Mary's virginity come to be contemplated in three principal stages.

Mary's virginity before the birth of Christ-This means Mary was virgin before and during the conception of Jesus.

Virginity in giving birth-This means Mary gave birth to Jesus without hurting her bodily integrity.

Virginity after the birth of Christ- This means that Mary having given birth to Christ remained a virgin for the rest of her life.

# The Immaculate Conception of Mary

Rev. D.A.Meno Basti Jayantha (O.M.I)

The immaculate conception is the first of the two modern dogmas on Mary which have become not only a matter of debate among non-Catholics but also a source of misunderstanding and misgivings within the Church.

The unique holiness of Mary celebrated in the Immaculate conception consists in her special place in God's plan of salvation. In view of her unique vocation to be the mother of Jesus Christ, God's absolute Love envelops her entire being from her conception through all the stages of her life; this envelopment finds its fulfilment in glory in her Assumption. To have a biblical foundation the protoevangelium is important for the theology of the Immaculate Conception. This feast of Mary's Nativity and Conception was introduced in the seventh century.

Eventhough there are many different ideas refuting the Immaculate Conception of Mary, it is accepted by the Catholic Church with a firm faith. Mary's holiness is God's free gift bestowed on her in view of her unique relationship to Jesus as Virgin-Mother of the Saviour. Thus the Church also shares in Mary's holiness.

# Mary's Assumption into Glory

......Rev.Bro.R.Robinson (O.M.I) ......

"We proclaim, declare and define as a dogma revealed by God; The Immaculate Mother of God, Mary ever Virgin, when the course of her earthy life was finished, was taken up body and soul into the glory of heaven." (Pope Pius XII Munificentissimus Deus)

It is the last dogma, so far declared by the Church. The addition of Mary's special titles; "Virgin" and "Mother" indicates the intimate connection of her Assumption with the Virginal Motherhood. Still, the Assumption is not presented as a theological conclusion from other prerogatives,but stands in itself as revealed truth.

The celebrations of Mary's Assumption had been prevalent in the relation and history of the Church for about one thousand years, even before it was declared as a dogma by Pope Pius XII. Of the 1196 Bishops who were consulted for the declaration of the dogma, 1191 of them gave a positive answer.

The death of Mary is a debated question. The traditions hold contrary views about the death of Mary. Pope Pius left this question deliberately open in the definition. The text speaks of the Assumption thus: "when the course of her earthly life was finished." Some theologians argued that Mary's freedom from original sin implied her freedom from death because death came as a punishment for sin (Gen2:17). However, we would argue (with most theologians): Mary shared in all the trials of our human family; hence she also experienced death, just as Jesus her son died though he was not under the sway of original sin.

The fact that Mary was assumed body and soul into the glory of heaven, strengthens our hope of eternal life and affirms the redemption of our entire self (body and soul).

Calls us to take care of our whole being.
Promises us the reward for doing the will of God.
Strengthens our attempt to make the world better.

## Gregory of Nazianzus (329-390)

...... Rev. JebanKumar Coongba ......

Gregory of Nazianzus is one of the three important Fathers of Capadocia. He is also popularly known as Christian 'Demosthenes' for his great eloquence. Through out his ministry he opposed and vehemently spoke against Arianism in defence of the Church.

His Father Gregory, being a bishop himself and his devout mother Nonna influenced him to develop a holy life in him. After receiving a basic education at home he was sent to Constantinople for better education. Later in Alexandria and Athens while studying together with St. Gregory of Nizza contributed a lot to the Church in her Nicene teaching.

Being an admirer of monastic life, after his baptism he went into the monastery with St. Basil. This saintly theologian had to come back from his monastery to assist his aged dad, who had him consecrated as his successor against his will.

In 379 he was summoned to Constantinople. Here he gave his famous five theological discourses which were mainly against the Arians. He was made a bishop there but resigned it for his personal dislike. The latter part of his life was spent in his family estate in contemplation and writing.

As a theologian he is a very important person of that era for his doctrinal contribution to the orthodox teaching. He, together with the other two Capadocian Fathers, gave the final touch to the 'Formula of Trinity'. His idea on the mystery of Christ will be used later in the Councils of Ephesus and Chalcedon.

He is not only a theologian but also a humanist and poet. His 45 discourses had been used in the rhetoric school and many of them were translated into other languages. He worked hard to establish a unique Christian poetical culture, reviving from secular poem. "On his life……" is the most famous dogmatic poem.



## குறுக்கெழுத்துப் போட்டி - இல 24

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

அனுப்புபவர் பெயர் : ..........................................

விலாசம் : ..........................................

..........................................

..........................................

**இடமிருந்து வலம்:-**

01. நீ அதன் இதை காயப்படுத்துவாய் (5)
25. ஆதிப்பெற்றோர் படைத்தவரிடமிருந்து விலகி இது செய்தனர் (3)
28. ஒரு தாயின் இது அவள் பெற்றெடுத்த மகனிலே வெளிப்படும். (3)
31. இயேசு அவரிடம் __________ அதைப்பற்றி நாம் என்ன செய்ய முடியும் என்று கேட்டார் (3)
33. மரியாவின் மகன் இயேசு என்பதை தெளிவு படுத்தும் நற்செய்தியாளர். (3)
35. பள்ளம் (2)

## மேலிருந்து கீழ்:-

01. மரியாவைப்பற்றி இயேசுவின் **இந்தப்** பருவ விபரிப்புகளில் காணலாம் (4)
02. தந்தை, மகன், தூய ஆவி (6)
04. இயேசுவின் முதல் புதுமை நடந்த இடம் (4)
06. கிரீடம் **இதன்** அடையாளம் (5)
09. இதில் கறுத்தக்கொழும்பான் வகை சுவையானது. (தலைகீழாயுள்ளது) (5)
11. சீடன் குருவில் கொண்டுள்ள மரியாதை (தலைகீழா யுள்ளது) (5)

- ☞ விடைகளில் பெரும்பாலானவை இவ்விதழின் கட்டுரைகளில் மறைந்துள்ளன.
- ☞ விடை எத்தனை எழுத்துக்களால் ஆனது என்பதை அடைப்புக்குள் உள்ள எண் குறிக்கும்.
- ☞ விடை வந்து சேரவேண்டிய இறுதிநாள் ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி

## அனுப்ப வேண்டிய முகவரி

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 24**

'இறையியல் கோலங்கள்'
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்.



# குறுக்கெழுத்துப் போட்டி இல. 23

## முடிவுகள்

### சரியான விடைகள்

**இடமிருந்து வலம்**

01. நிலை வாழ்வு
07. கற்பனை
16. பத்து
22. துட்டு
31. வாக்குறுதி/உறுதிமொழி

**மேலிருந்து கீழ்**

01. நினைவுகூர
03. வாற்கோதுமை
05. துரவு
06. சாபாத்து
10. கபடு
14. அவதூறு
24. பித்து

**குறிப்பு:**

31 இடமிருந்து வலத்துக்கான குறிப்பில் தவறு ஏற்பட்டுவிட்டது. வலமிருந்து இடமென குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும். குழப்பத்திற்காக வருந்துகிறோம். இதனால் உறுதிமொழி என்ற விடையையும் சரியான விடையென ஏற்றக்கொள்ளுகிறோம்.

## பரிசு பெறுவோர்

**1ம் பரிசு :**

**பத்திநாதர் ஜேன் புளோறில்டா**
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

**2ம் பரிசு :**

**அ.துஷ்யந்தி**
8ம் வட்டாரம் மந்துவில்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

**3ம் பரிசு :**

**எஸ்.அனுஷா**
இல 697 கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

## சரியான விடை எழுதி பாராட்டுப் பெறுவோர்

திருமதி.ம.மகாரத்தினம், வவுனியா; ஜெயா செபமாலை, வவுனியா; த.மேரி லிசி, முள்ளியவளை; ப.எடல் கஸ்றோ, ப.நதியா, வலைஞர் மடம்; மார்செல்லோ பியோ, இளவாலை; செ.அனஸ்லி பிலிப், இளவாலை; செ.கிருசன், போயிட்டி; செ.கிருசாந்தினி, போயிட்டி; யே.மேரி வேர்ஜீனியா, கரவெட்டி; தா.வனிஸ்ரன், கொ.றெஜீன், பாஷையூர்; க.கமீர்தாஸ், கொடிகாமம்.

## இவர்களை எமது முகவர்களாக அறிவிக்கின்றோம்

**01. இளவாலை மாரீசன்கூடல் பங்குகள்** - **செல்வன் பே.றொனிபஸ்**
மாரீசன்கூடல்,
இளவாலை.

**02. மானிப்பாய் பங்கு** - **செல்வி அ.ஜெயசுதா**
தூய அன்னாள் ஆலயம்,
மானிப்பாய்.

**செல்வன். சிவசங்கர்**
திருக்குடும்ப ஆலயம்,
மல்வம்.

**03. ஆனைக்கோட்டைப் பங்கு** - **R.புஸ்பநாயகி**
தூய அடைக்கல அன்னை ஆலயம்,
ஆனைக்கோட்டை.

**P.கவிதா**
தூய பேதுரு ஆலயம்,
நவாலி.

**04. நாவாந்துறை பங்கு** - **செல்வி ம.செல்வநாயகி**
தூய நீக்கிலார் ஆலயம்,
நாவாந்துறை.

**செல்வி ரூபா**
தூய மரியன்னை ஆலயம்,
நாவாந்துறை.

| | | |
|---|---|---|
| **05. சுண்டிக்குளி பங்கு** | - | **செல்வி லூட் ரொய்சியா லூர்துநாயகம்.**<br>தூய திரேசா ஆலயம்,<br>சுண்டிக்குழி.<br><br>**செல்வி றொயிற்றா சாந்தின செல்வநாயகம**<br>தூய திருமுழுக்கு யோவான்<br>ஆலயம்,<br>சுண்டிக்குளி. |
| **06. பாண்டியந்தாழ்வு பங்கு** | - | **திரு. மரியநாயகம்**<br>தூய அன்னாள் ஆலயம்,<br>பாண்டியந்தாழ்வு. |
| **07. பாசையூர் பங்கு** | - | **செல்வி றொ. தனுசியா**<br>தூய அந்தோனியார் ஆலயம்<br>பாசையூர். |
| **08. அரியாலைப் பங்கு** | - | **செல்வி ஜெயா**<br>கிறிஸ்து அரசர் ஆலயம்,<br>கொய்யாத்தோட்டம். |
| **09. சக்கோட்டைப் பங்கு** | - | **செல்வி சு. நேசநாயகி (சுகி)**<br>தூய சவேரியார் ஆலயம்,<br>சக்கோட்டை.<br><br>**செல்வி எ. லூயின் கொன்சேகா**<br>குழந்தை யேசு ஆலயம்,<br>சக்கோட்டை. |
| **10. உரும்பிராய் பங்கு** | - | **செல்வி. டல்சி**<br>தூய மைக்கல் ஆலயம்,<br>உரும்பிராய்.<br><br>**செல்வி. இந்துசா**<br>தூய மரியாள் ஆலயம்,<br>நீர்வேலி. |

# வாழ்த்துகிறோம்

## ஆயர் பணியில் 25 ஆண்டுகளை நிறைவுசெய்யும்



எமது அன்புக்குரிய ஆயர்

## பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம்

ஆண்டகை அவர்களுக்கு

## இறையியல்கோல வாசகர்கள் சார்பில

நல்வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

- புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி குடும்பம் -

## ஆயரின் யூபிலிச் செபம்

எல்லாம் வல்ல தந்தையே இறைவா!

''நானே நல்ல ஆயர்! என் ஆடுகளை நான் அறிவேன்'' என்று உம் திருமகன் மொழிந்தாரே! / அவர் ஏற்படுத்திய திருச்சபையின் / மந்தைகளாக வாழும் வரத்தை எமக்கு அளித்தீரே / அதற்காக உம்மை போற்றுகின்றோம்./ எம்மை உமது திருவுளப்படி வழி நடத்துவதற்காக / உமது திருத்தூதர்களின் வழிமரபினராக ஆயர்களை தேர்ந்தெடுத்தீர். அவர்களை அருட்பொழிவு செய்து தவறா நெறியில் நாம் நடந்துவர சித்தம் கொண்டீர்! / இந்த அன்புச் செயலுக்காக உம் புகழ் பாடுகின்றோம்./

ஆயர் பணிக்கென உம்மால் தேர்ந்துகொள்ளப்பட்டு, / அருட்பொழிவு செய்யப்பட்டு / கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக / மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மறைமாவட்டங்களை / வழிநடத்தி வருகின்ற எமது ஆயர் / பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகைக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். / அவருடைய பணிவாழ்விலே துணை நின்ற ஆவியானவருக்காகவும் / அந்த ஆவியானவரின் உந்துதலால் எமது ஆயர் மேற்கொண்ட அனைத்து பணிகளினூடாக / இறைமக்களாகிய நாம் பெற்றுக்கொண்ட உமது ஆசீர்வாதங்களுக்காகவும் / இறைவா ஊம்மைப் போற்றுகின்றோம்./

வன்முறைகளும், பயங்கரங்களும், / பகைமைகளும், இயற்கை அனர்த்தங்களும் நிறைந்த / ஒரு இருள் சூழ்ந்த காலகட்டத்திலே / உமது மக்களை விசுவாசத்திலே திடப்படுத்தி, /| அன்பினால் ஆதரித்து பணிபுரிய / அவருக்கு நீர் துணை நின்றீரே! / இனிவரும் காலங்களிலும் எம் ஆயருக்கு பக்கபலமாக இருந்து / உம் அருளினால் வழிநடத்த வேண்டுமென்று மன்றாடுகின்றோம். / உமது மக்களை விடுதலை வாழ்வின் பாதையில் / அழைத்துச் செல்வதற்கு வேண்டிய / ஞானத்தையும் விவேகத்தையும் தொடர்ந்து அவருக்கு அளித்தருளும். / மிகுந்த ஆரோக்கியத்துடனும் / ஆன்ம பலத்துடனும் பணியாற்ற / தேவையான வரங்களால் அவரை நிறைத்து பாதுகாத்தருளும்./

சமாதானத்தின் தேவனே! / எமது ஆயரின் வழிநடத்துதலுக்கு கீழ்ப்படிந்து வாழ்ந்துவரும் / சிறிய மந்தையாகிய எமக்கும் / எமது நாட்டு மககள் அனைவருக்கும் / நீதியோடு கூடிய சமாதானத்தைத் தந்து / உமது ஆசீரினால் எம்மை நிறைத்தருள வேண்டுகின்றோம். / என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற உம் திருமகன் இயேசுக்கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்.



St .Joseph's Catholic Press, Jaffna. TP: 021 222 2378

# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் காலாண்டு இதழ்
ஆண்டுச் சந்தா உள்நாடு (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 100/=
வெளிநாடு (அஞ்சல் செலவு உட்பட) U.S.$ 10
Euro 8

தனிப்பிரதி 30/=


தொடர்பு கொள்க:

**இறையியல் கோலங்கள்**
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2482, 021 222 7145


# ...AI IYAL KOLANGAL

A Tamil Theological Quarterly
Annual Subscription: Local (Incl. postage) Rs. 100/=
Foregn (Incl. postage) U.S.$ 10
Euro 8
Single Copy Rs. 30/=


...spondence to:

**...ai Iyal Kolangal**
...rancis Xavier's Seminary
Columbuthurai, Jaffna,
Sri Lanka.
Tel: 021 222 2482, 021 222 7145



Registered
No. QD 76


Design
Juleson